பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 தை 13 செவ்வாய்க்கிழமை (27-01-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:62



இந்தியாவின் 55 ஆவது குடியரசு தினத்தையொட்டி கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம் (ரெலோ), த.சித்தார்த்தன் (புளொட்), டக்ளஸ் தேவானந்தா (ஈ.பி.டி.பி), அமைச்சர் பெ.சந்திரசேகரன் ஆகியோரை முதலாவது படத்திலும்,

இந்தியத்தூதர் நிருபம் சென், தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன், அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரை அடுத்த படத்திலும் காணலாம்.

### இந்தியாவுடன் இலங்கை செய்துகொள்ளும்

# பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கு புலிகள் கடும் எதிர்ப்பு!

## புதுடில்லிக்கு மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு

லண்டன்,ஜனவரி27



இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உத்தேசப் பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆழ்ந்த கவலையும் எதிர்ப்பும் வெளியிட்டிருக்கிறது. இந்த ஒப்பந்தம் தற்போதைய சமாதான முயற்சிகளில் மிக மோசமான எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் புலிகள் தெரிவித்திருக்கின்றனர். உத்தேசப் பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பான தமது இயக்கத்தின் ஆட்சேபத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், நோர்வே ஊடாக இந்திய அரசுக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றார்.

"உத்தேச ஒப்பந்தம் அதிகாரச் சமநிலை விடயத்தில் புலிகளுக்குப் பாதகமான விளைவு ஏற்படுத்தும், இராணுவச் சமநிலையில் ஏற்படும் குழப்பம், இலங்கை சமாதான முயற்சிகளுக்கு அடிப்படையான யுத்த நிறுத்த உடன்படிக்கையையே குழப்பி விடும்" - என்று மதியுரைஞர் பாலசிங்கம் நோர்வேத் தரப்புக்குச் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

"இந்தியாவுடனான இராணுவ ஒப்பந்தம், சிங்கள அரசியல் தலைமைத்துவத்தை தமிழர் தொடர்பாகக் கடுமையான - யுத்த முனைப்புடைய - போக்கைக் கடைப்பிடிக்கத் தூண்டும். அது ஏற்கனவே முரண்பட்டிருக்கும் சமூகங்களை ஆற்றுப்படுத்தவும அவற்றிடையே சமாதானத்தை வளர்க்கவும், மிக முக்கிய அடிப்படையாக விளங்கும் பரஸ்பர நம்பிக்கையை அடியோடு தகர்த்து விடும்" - என்றும் விளக்குகின்றார் பாலசிங்கம்.

"கொழும்பில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியால் சமாதான நடவடிக்கைகளுக்கு அபாயம் நேர்ந்துள்ள இந்த இக்கட்டான சமயத்தில், இராணுவ சம்பந்தப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை அவசர அவசரமாக மேற்கொள்ள வேண்டிய தந்திரோபாயத் தேவை ஏதும் இந்திய அரசுக்கு உருவாகவில்லை" - என்றும் பாலசிங்கம் சுட்டிக்காட்டினார்.

"இத்தகைய ஒப்பந்தம் தமிழர்களின் நலனுக்குத் தீங்கு விளைவிப்பதாகவும் அவர்களின் பேரம் பேசும் வலுவைப் பாதிப்பதாகவும் அமையும்"

(14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு ஐரோப்பாவுக்கு இன்று புறப்படுகிறது

யாழ்ப்பாணம்,ஜன.27

விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் ஐரோப்பிய சுற்றுப்பயணத்துக்கு இன்று வன்னியிலிருந்து புறப்பட்டுச் செல்கின்றனர். முதலில் இவர்கள் நோர்வே செல்கின்றனர். அங்கு நோர்வே வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் மற்றும் இலங்கையில் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நோர்வேக் குழுவினரையும் இவர்கள் சந்தித்துப் பேச்சு நடத்துவார்கள். தேக்கநிலையை அடைந்துள்ள சமாதான முயற்சிகள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு குறித்து அப்போது தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் விளக்குவார்கள் என்று கூறப்படுகிறது. பின்னர் சுவிற்ஸர்லாந்து, பிரான்ஸ், சுவீடன் ஆகிய நாடுகளுக்கும் விடுதலைப் புலிகளின் குழுவினர் செல்கின்றனர். அந்த நாடுகளில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள், வடக்கு - கிழக்கின் மனிதாபிமானப் பணிகளுக்கு உதவுவது தொடர்பாக இவர்கள் பேச்சு நடத்துவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ)

## வெள்ளவத்தையில் நேற்று பொலிஸார் இருவர் படுகாயம்!

கொழும்பு,ஜன.27

வெள்ளவத்தை 'சவோய்' திரையரங்கிற்கு முன்பாக உள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் நேற்று மாலை இடம்பெற்ற சம்பவத்தில் இரண்டு பொலிஸார் படுகாயமடைந்தனர். இவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் நேற்று முன்னிரவு தெரிவிததன.

சம்பவம் பற்றித் தெரிவிக்கப்படுவதாவது:-

குறிப்பிட்ட பொலிஸ் சோதனைச் சாவடியில் நேற்று வழமைபோல இரு பொலிஸார் கடமையில் நின்று கொண்டிருந்தனர். அச்சமயம் அப்பகுதியில் வந்த சிலர் திடீரென பொலிஸார் மீது பாய்ந்து அவர்களிடமிருந்த துப்பாக்கிகளைப் பறிக்க முயன்றனர். அப்போது ஏற்பட்ட இழுபறியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பொலிஸார் ஒருவர் படுகாயமடைந்தார். மற்றைய பொலிஸார் கூரான ஆயுதத்தால் தாக்கிக்

(14ஆம் பக்கம் பார்க்க)

### காரைநகரில் நேற்று அதிகாலை

## கடற்படைச் சிப்பாயின் சடலம் சூட்டுக் காயத்துடன் மீட்பு!

யாழ்ப்பாணம்,ஜன.27

காரைநகர் கஞ்சதேவா கடற்படைத் தளக் காவலரண் ஒன்றில் நேற்று அதிகாலை தலைப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் கடற்படைச் சிப்பாய் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

பண்டாரவளையைச் சேர்ந்த பிரசாந் நிலுங்க விஜயவர்த்தனா (வயது 30) என்பவரின் சடலமே மீட்கப்பட்டது.

நேற்று நண்பகல் சம்பவ இடத்துக்குச் சென்ற மேலதிக நீதிவான் மு.திருநாவுக்கரசு விசாரணை மேற்கொண்டார்.

நேற்று அதிகாலை 5.45 மணியளவில் குறிப்பிட்ட காவலரணில் துப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## விறகுவெட்டச் சென்ற இளைஞர் மிதிவெடியில் சிக்கிக் கால்இழந்தார்!

### குடத்தனையில் நேற்றுச் சம்பவம்

கரவெட்டி,ஜன.27

விறகுவெட்டச்சென்ற இளைஞர் மிதிவெடியில் சிக்கிக் காலை இழந்தார். இந்தச் சம்பவம் வடமராட்சி, குடத்தனை 5ஆம் கட்டைப் பகுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

துன்னாலை கிழக்கைச் சேர்ந்த மரியதாஸ் அசோகாந்தன் (வயது 24) என்பவரே மிதிவெடியில் சிக்கியவராவார்.

சன நடமாட்டம் அற்ற குறிப்பிட்ட பகுதிக்கு இவர் வேறு சிலருடன் விறகு வெட்டச் சென்றார். அப்போது மிதிவெடியில் சிக்கிப் படுகாயமடைந்த இவரை, உடன்சென்றவர்கள் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் சேர்த்தனர். இந்த விபத்தில் இவரது இடது கால் முழங்காலுடன் துண்டிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஒ-9-70)

# ஜனாதிபதி - பிரதமர் அரசியல் பிணக்கிற்கு வாஷிங்ரன் மாநாட்டுக்கு முன்னர் தீர்வு!

### அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் முழுநம்பிக்கை

கொழும்பு,ஜன.27

ஜனாதிபதி - பிரதமர் அரசியல் பிணக்கிற்குத் தீர்வுகாணும் அறிகுறிகள் தென்பட்டுள்ளன. வாஷிங்ரனில் எதிர்வரும் பெப்ரவரி 17ஆம் திகதி நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டுக்கு முன்னர் இத்தீர்வு காணப்படலாம் என்று அமைச்சரவைப் பேச்சாளரான அரசியல் விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று நம்பிக்கை தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையே முக்கிய விடயங்கள் குறித்து இணக்கத்தை ஏற்படுத்த மனோ - மலிக் அதிகாரிகள் குழு இடைவிடாது அதிதீவிர முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது எனவும் அமைச்சர் கூறினார்.

சமாதானப் பேச்சுக்களுக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் முக்கிய விடயங்கள் தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் கூடி பரிசீலனை செய்த அதிகாரிகள் குழு, இன்னும் சில தினங்களில் மீண்டும் கூடி பேசவுள்ளது. எனவே, வாஷிங்ரனில் பெப்ரவரி 17ஆம் திகதி நடைபெறும் உதவி வழங்கும் மாநாட்டிற்கு முன் ஒரு சுமுகமான முடிவு காணப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது எனவும் அமைச்சர் கூறினார்.

நேற்றுக்காலை அரசாங்கப் பேச்சாளரின் அலுவலகத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இவற்றைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் இழுபறி நிலைகளினால் சமாதானப் பேச்சுத் தடைப்பட்டுள்ள போதும் சமாதானத்திற்கான முன்னெடுப்புகளும் முயற்சிகளும் தொடர்கின்



(14ஆம் பக்கம் பார்க்க)

## மண்டபம் முகாமிலிருந்து இலங்கை திரும்ப அகதிகள் விண்ணப்பம்

மண்டபம்,ஜன.27

மண்டபம் முகாமிலுள்ள சுமார் ஆயிரம் இலங்கை அகதிகளில் 915 பேர் இலங்கை திரும்ப விண்ணப்பித்துள்ளனர். இதனையடுத்து, அந்த அகதிகள் படிப்படியாக இலங்கைக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.

கடந்த 16ஆம் திகதி மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 9பேர் விமான மூலம் இலங்கை திரும்பினர். இதனையடுத்து மேலும் 42 குடும்பங்களைச் சேர்ந்த 155 பேர் இன்று முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை கட்டம், கட்டமாக இலங்கை திரும்புவர். (ஐ)

## சு.க.-ஜே.வி.பி. புதிய கூட்டமைப்பு சமாதான முயற்சியைப் பாதிக்கும்?

### இரு அமெரிக்க கல்விமான்கள் கருத்து

கொழும்பு,ஜன.27

சு.க. - ஜே.வி.பி. கூட்டமைப்பின் பின்னர் சமாதான முயற்சியின் எதிர்காலம் குறித்து வட அமெரிக்காவிலுள்ள இரு அமெரிக்க கல்விமான்கள் அவநம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

நெப்ரஸ்கா வெஸ்லியன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஒபர்ஸ்ட், மெககில் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மியா புளும் ஆகிய இவ்விரு கல்விமான்களின் கருத்துக்களையும் 'தமிழ்நெட்' இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

பேராசிரியர் ஒபர்ஸ்ட் கூறியிருப்பதாவது:-

அடுத்து என்ன நடக்கும் என்பது குறித்து ஹேஷ்யம் கூறுவதை சு.க. - ஜே.வி.பி. கூட்டமைப்பு கடினமாக்கியுள்ளது. சமாதான முயற்சியை கூட்டமைப்பு சிக்கலாக்கியுள்ளது. தேர்தலில் தெரிவு செய்யப்பட்டால் சு.க. அரசு எந்த வழியைத் தெரிவு செய்யும் என்பது குறித்து அது பெரும் நிச்சய மற்ற நிலையைத் தோற்றுவித்துள்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மக்கள் இடம்பெயர்ந்து அல்லற்படும் போது சுதந்திர தினக் கொண்டாட்டம் அவசியமா?

## நலன்புரி நிலையங்களின் சமாசம் கேள்வி

யாழ்ப்பாணம்,ஜன.27

மக்கள் இடம்பெயர்ந்து அல்லற்படும்போது சுதந்திரதினக் கொண்டாடங்கள் அவசியமா? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளது.

யாழ்.மாவட்ட இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் -

இது தொடர்பாக சமாசம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மக்கள் தமது பாரம்பரிய மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு, நலன்புரி நிலையங்களிலும் அடுத்தவர் வீடுகளிலும் இன்னல்பட்டுக் கொண்டிருக்கும் போது சுதந்திர நாள் கொண்டாட்டம் அவசியமா என்பதை அனைவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். குறிப்பாக வலி.வடக்கு பகுதி மக்கள் சொந்தக் காணிகளை இழந்து விவசாய நிலங்களை , கடற்றொழிலை, வேலை வாய்ப்புக்களைப் படையினரின் ஆக்கிரமிப்பால் இழந்து விட்டார்கள் என்பதை யாவரும் அறிவர்.

உயர் பாதுகாப்பு வலயம் எமது வாழ்க்கையையே விழுங்கிவிட்டது. எமது அடுத்த சந்ததிக்கு நாம் தரப் போகும் முதுசம் அகதி வாழ்க்கையாகத்தான் உள்ளது.

எனவே, வலி.வடக்கு செயலகத்தில் பெப்ரவரி 4ஆம் திகதி சுதந்திர தினம் கொண்டாடப்படுவதை எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது. அந்த நிகழ்வை முற்றாக நிராகரிக்கின்றோம்.

எமது மண் எங்கோ எட்ட முடியாத கானல் நீராக எமக்கு கற்பனையில் மட்டுமே இருந்து வருகிறது. நாம் எமது சொந்த முகவரிகளை இழந்து கண்ணீர் விடுகின்றோம். இந்த நிலையில் சுதந்திரதினக் கொண்டாட்டம் வெந்த புண்ணில் வேல் பாய்சுவதாக அமைந்து விட அனுமதிக்க முடியாது.

அடிப்படை மனித உரிமைகளை மீறி நிற்கும் உயர் பாதுகாப்பு அகற்றப் படும்போதுதான் ம்க்களின் இயல்பு வாழ்க்கைக்கான பாதை திறக்கும்.

பெப்ரவரி 4ஆம் நாள் கொண்டாடுவதற்கான நாளல்ல. அது இடம் பெயர்ந்து அல்லலுறும் மக்களுக்கு துக்க நாள் என்பதை அனைத்துலகமும் புரிந்து கொள்ளட்டும்.

- என்று அதில் உள்ளது.

# உசன் வித்தியாலயத்துக்கு விளையாட்டுத்திடல் அன்பளிப்பு

## படையினர் அமைத்து வழங்கினர்

யாழ்ப்பாணம்,ஜன.27

உசன் இராமநாதன் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் 55 ஆவது படைப்பிரிவினரால் புதிதாக அமைக்கப்பட்ட கூடைப்பந்தாட்டத்திடல் பொதுப் பாவனைக்காக நேற்று உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

ஆடுகளத்தைக் கையளிக்கும் நிகழ்வு நேற்றுக்காலை இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக 55 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் வி.ஆர்.சில்வா கலந்து கொண்டார். ஆடுகளத்தின் பெயர்ப் பலகையை அவர் திரைநீக்கம் செய்து வைத்து வித்தியாலய அதிபரிடம் ஆடுகளத்தை சம்பிரதாயபூர்வமாகக் கையளித்தார்.

உசன் இராமநாதன் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நீண்டகாலமாக முகாம் அமைத்திருந்த படையினர் அதில் மாணவர்கள் விளையாட்டுகளில் ஈடுபட அனுமதிக்கவில்லை. அதனால் அப்பாடசாலையின் விளையாட்டுச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன. அவற்றை நிவர்த்தி செய்யும் முகமாகவே சுமார் 5 லட்சம் ரூபா செலவில் இந்த விளையாட்டுத்திடல் படையினரால் அமைக்கப்பட்டு பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-5)




உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்துக்கு படையினரால் அமைத்து வழங்கப்பட்ட கூடைப்பந்தாட்ட திடலையும் அங்கு திரைநீக்கம் செய்யப்பட்ட பெயர் பலகையையும் படங்களில் காணலாம்.

# கசிப்பு உற்பத்திச் சாதனங்களுடன் கைதானவருக்கு 18 மாதச் சிறை!

## மல்லாகம் நீதிமன்றம் விதித்தது

தெல்லிப்பழை,ஜன.27

2 ஆயிரத்து 400 டிராம் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திச் சாதனங்களுடன் கைதுசெய்யப்பட்ட இளைஞர் ஒருவருக்கு 18 மாத கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

சுன்னாகம், ஊரெழு வடக்கைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கே மல்லாகம் நீதிமன்றம் இந்தத் தண்டனையை விதித்தது.

சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த இந்த இளைஞர் இளவாலைப் பகுதியில் வைத்து 2 ஆயிரத்து 400 டிராம் கோடாவுடனும் கசிப்பு உற்பத்திச் சாதனங்களுடன் கடந்த 22ஆம் திகதி இளவாலைப் பொலீஸாரல்கைது செய்யப்பட்டார். கடந்த 23ஆம் திகதி இவா மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். அப்போது கசிப்பு உற்பத்தியிலீடுபட்டேன் என்று அவர் ஒப்புக்கொண்டார். இதனையடுத்து அவருக்கு 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அதனைக் கட்டத்தவறினால் 18 மாதக் கடூழியச சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பில் கூறப்பட்டது. மேற்படி இளைஞர் சார்பில் அபராதம் செலுத்தப்படவில்லை. இதனால் அவருக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

# தோட்டக்கிணற்றில் யுவதியின் சடலம்!

அச்சுவேலி,ஜன.27

நேற்றுமுன்தினம் காணாமற்போனவர் என்று கூறப்படும் யுவதி ஒருவரின் சடலம் நேற்றுக்காலை தோட்டக்கிணறு ஒன்றிலிருந்து மீட்கப்பட்டது.

அச்சுவேலி பத்தமேனிப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச்சேர்ந்த சிங்கராசா சசிரேகா (வயது21) என்ற யுவதியின் சடலம் மீட்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் இவரை வீட்டில் காணாது உறவினர்கள் தேடினர் என்றும் -

வீட்டருகே உள்ள தோட்டக் கிணற்றில் யுவதியின் சடலம் நேற்றுக்காலை கண்டுபிடிக்கப்பட்டது என்றும் -

அச்சுவேலி பொலீஸாருக்கு இது குறித்த தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து பொலீஸார் சடலத்தை மீட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சடலம் மரணவிசாரணையின் பொருட்டு யாழ்.வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-6-11)

# யாழ்.வந்த மினிபஸ்ஸில் கொள்ளை!

தென்மராட்சி,ஜன.27

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பயணிகளுடன் வந்த மினி பஸ புத்தளம் பகுதியில் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டு கொள்ளையிடப்பட்டது.

மினி பஸ்ஸில் வந்த பயணிகள் தாக்கப்பட்டு, அவர்களது பணம், நகைகள் மற்றும் உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டன என்றும் - அதன் பின்னர் கொள்ளைக்கும்பல் மினிபஸ்ஸை செல்ல அனுமதித்ததாகவும் மினி பஸ்பயணிகள் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# அணிசேராக் கொள்கையிலிருந்து இந்தியா விலகிச் செல்லாது!

## குடியரசு தின விழாவில் தூதுவர் நிருபம் சென்

கொழும்பு,ஜன.27

இந்தியா எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அதன் அணி சேராக் கொள்கையில் இருந்து விலகிச் செல்லாது. இலங்கையில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினைக்கு நாட்டின் இறைமைக்குப் பாதிப்பேற்படாதவகையில் அனைவரும ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை பேச்சு மூலமே ஏற்படுத்தவேண்டும் என்று இரு தரப்பினையும் இந்தியா வலியுறுத்துகின்றது என்று கூறினார் இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் நிருபம் சென்.

இந்தியாவின் குடியரசு தினம் நேற்று இந்தியத் தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லமான 'இந்தியா இல்லத்தில்' வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்த வைபவத்தில் இங்கு வாழும் இந்திய வம்சாவளியினரும் வர்த்தகப் பிரமுகர்களும் கல்வி பயிலும் இந்திய மாணவர்களும் பெருமளவில் கலந்துகொண்டனர்.

காலை எட்டு மணிக்கு தூதுவர் விழா மேடைக்கு வந்து இந்திய தேசிய கீதம் இசைக்க இந்தியத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். அதன் பின் விசேட பாதுகாப்புப் படையினரின் அணி வகுப்பு மரியாதையை அவர் ஏற்றுக்கொண்டார்.

இந்த வைபவத்தின்போது உரை நிகழ்த்திய இந்தியத்தூதுவர் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாரம்பரிய கலாசார தொடர்புகளை நினைவு கூர்வதோடு, இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவு மிகவும் உறுதியானது என்றார்.

வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கும் பொதுமக்களுக்குத் தேவையான சுகாதார உட்கட்டமைப்புப் பணிகளுககும் இந்தியா பங்களிப்பு செய்துள்ளது. மலையகத்தில் நவீன வசதிகளைக் கொண்ட வைத்தியசாலை ஒன்று அமைக்கப்படும் எனவும் தூதுவர் கூறினார்.

இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமின் சுதந்திரதின் செய்தியையும் அவர் தெரிவித்தார். (ஐ)

## பெற்றோல் விலை 2 ரூபாவால் அதிகரிப்பு

கொழும்பு,ஜன.27

பெற்றோல் விலை கடந்த ஞாயிறு நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் இந்த விலை அதிகரிப்பை அறிவித்துள்ளது.

விலை அதிகரிப்பின்படி, 53 ரூபாவாக இருந்த லங்கா பெற்றோல் 90 ஒக்டேன் ஒரு லீட்டர் 55 ரூபாவாக அதிகரித்துள்ளது. 66 ரூபாவாக இருந்த லங்கா பெற்றோல் 95 ஒக்டேன் ஒரு லீட்டர் 58 ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

மண்ணெண்ணெய், டீசல் உட்பட ஏனைய எரிபொருள்களின் விலைகளில் எந்த மாற்றமும் இல்லை. (ஐ)

**பொலீஸ் சேவையிலுள்ள குறைந்த தரத்தினரின்**

# சம்பள உயர்வு குறித்து ஆராய நிதி அமைச்சால் குழு நியமனம்

கொழும்பு,ஜன.27

பொலீஸ் சேவையிலுள்ள உறுப்பினர்களின் சம்பள உயர்வு தொடர்பாக ஆராய்வதற்கு நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி குழு ஒன்றை நியமித்திருக்கிறார்.

பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள், அத்தரத்துக்குக் குறைந்த தரங்களில் உள்ளோர் ஆகியோரின் சம்பள உயர்வு குறித்து இக்குழு குறிப்பாக ஆராயும்.

இவற்றைவிட உயர்ந்த தரங்களில் உள்ள பொலீஸ் அதிகாரிகள் கடந்த மூன்று ஆண்டுகளில் சம்பள உயர்வுகளைப் பெற்றுள்ளனர்.

பிரதமரின் ஆலோசகரான அப்பாஸ கரலிங்கம் இக்குழுவிற்கு தலைமை வகிப்பார். நிதி அமைச்சின் ஆலோசகரான ரொமேஷ் பண்டாரநாயக்க திறைசேரி, பொது நிர்வாக அமைச்சு, பொலீஸ் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் ஆகியோரும் இக்குழுவில் இடம்பெறுகின்றனர்.

வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வை ஆயுதப் படையினர் பெற்றுக்கொண்டுள்ளனர். (ஐ)

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை சித்தியடைந்த மாணவர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜன.27

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் வெளியாகின. இதில் ஒரு தொகுதிப் பாடசாலைகளில் மாணவர்பெற்ற புள்ளிகளின் விவரங்கள் நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தன. மற்றொரு தொகுதிப் பாடசாலைகளின் பெறுபேறுகள் இங்கு வெளியாகியுள்ளன.

### யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை

தோற்றியோர் - 234, சித்தி - 108.

பி.யதுர்ஷனன் (171), ஏ.றோய் பானுசங்கர் (164), எம்.மிதுரிகா (169), வி.நராயனி (161), ஆர்.லமிரிகா (161), கே.கிரிஷிகா (160), ரி.சுஜீவன் (160), எஸ்.துஷானி (158), ஆர்.வித்தகன் (158), எஸ்.கஜலக்ஷன் (156), யூ.மேனலானன் (155), பி.சாருகா (154), பி.கிருஷாந் (153), எஸ்.ரகுராம் (154), எஸ்.சுபாபங்கன் (154), ஏ.பிரியந்தினி (153).

ஜீ.கனபாலன் (152), பி.ஜெனார்த்தனசர்மா (152), எஸ்.கமலதாசன் (152), வி.சுஜீவன் (150), வி.வைஷ்ணவி (149), எஸ்.டிலுக்ஷனா (148), ரி.கோகுலசாந்த் (148), ஆர்.கீர்த்தனா (148), என்.துளஷிகா (147), என்.சிந்தூரி (147), ஜீ.சாருஜா (146), எஸ்.தனுஜா (146), எம்.விதுர்ஷனா (146), எம்.சஞ்சீவன் (145), எஸ்.சஞ்சுதா (144), எம்.நர்மதா (144), கே.தனுஷன் (144), ஜே.வேணுகானன் (143).

எம்.பிரியதர்ஷினி (143), ஆர்.விஷோபன் (143), கே.விஸ்ணுகோபன் (143), யூ.பௌஷிகா (142), கே.நிஷாந்தன் (142), ஆர்.நிருஜன் (142), ரி.தர்ஷிகன் (142), கே.மந்தாகினி (140) எஸ்.பிரவீணா (139), ரி.யதிர்ஷன் (139), இ.அனுஷிகா (139), ஜீ.சிறீநாத் (139), வி.பகீதரன் (139), எஸ்.பிரசாந் (138), கே.சாய்சங்கர் (137), ஆர்.நிருஷிகா (136), ஜே.ஜீஷன் (136), எஸ்.சிந்துபாகவி (136), எஸ்.கோபிதன் (136), எஸ்.துவாரகன் (136), வை.சுபாஜினி (135), ஆர்.சிறீதுவாரகன் (135).

எஸ்.சிந்துஜன் (135), ஆர்.கிரிசந்திரா (134), ரி.ஜெய்டி லக்ஸ்ஷன் (134), ஜே.குபேரகா (133), ஆர்.ரவிசங்கர் (133) கே.யுவராஜ் (132), ஏ.நிலோஜன் (132), ஜே.சங்கீதா (132), எஸ்.நரேந்திரன் (132), ஜி.மயூரன் (132), வி.நிலாஜனன் (132), எஸ்.சுமந்தரன் (131), ஜி.துளக்ஷிகா (131), வி.ஆர்த்திகன் (131), எஸ்.கிரிகரன் (131), எஸ்.திருமகள் (130), எம்.கஜீபன் (129), கே.சபேசன் (129), எம்.விதுஷன் (129), ரி.ரகுநாந்தனன் (129),

ரி.மனோஜன் (128), வி.கஜானனன் (128), எஸ்.துஷாஜினி (128), எம்.நந்தனன் (128), ஆர்.யதுர்ஷன் (127), ரி.கோபிதாஸ் (127), எஸ்.சானுசா (126), எஸ்.டக்ஷன் (125), எஸ்.சிவதாயனி (125), எஸ்.சிந்துஜன் (125), ஆர்.உமையாள் (124), ஜீ.ஜீவிதா (124), எஸ்.யதுர்ஷன் (124), எஸ்.அரவிந் (123), எஸ்.வினோஜா (123), ரி.டிலக்ஷன் (122), ஆர்.ஸ்ராலினி (122), எஸ்.ஆரனி (122), ரி.கலாரூபன் (122), ஜீ.யதுபாலன் (122), எஸ்.பிரசாந் (121), வி.உஷாஜினி (121), வி.பவித்திரா (121), கே.நிதர்ஷனா (120), ஆர்.யசிந்தன் (120), ஜீ.கௌதமன் (120), எஸ்.சுஜீபா (120), ஆர்.முதிஷ் (119), ஏ.பார்த்தீபன் (119), எம்.பவித்திரா (118), எஸ்.தேனுஜா (130), வி.தனுஷன் (130)

### புனித ஜோன் பொஸ்கோ பாடசாலை

தோற்றியோர் -186 சித்தி - 82

எஸ்.அமுதீசன் (158), கே.அபிலாஷினி (128), ஆர்.அனஸ்ரன் (144), எஸ்.அபிரா (156), ரி.பிறயன்ஹெறிக் (161), எல்.ஏ.கிரிஷானா (158), பி.பானுஜன் (157), எம்.லக்சினி புளோறா (140), வி.பானுப்பிரியன் (135), ரி.ஜெனோஷா (137), எம்.டயான்ரே (143), வி.கிருஷாந்தி (127), எம்.டிலான்ரோ (133), பி.மயூரி (151), பி.குருபரன் (136), வை.மதுஜா (127), ஏ.லதாங்கன் (138), எம்.மேரி.அனிதா (137), எஸ்.மணிவண்ணன் (131), ஏ.மதுவந்தி (122), வி.மகிழன் (161), என்.மாதங்கி (135), எம்.மதீசன் (133), என்.புராதனி (141), ஆர்.நிரேஷ் (124), எம்.சுமித்திரா (122), ரி.பெனடிட்சைலே (149), வி.சுதந்தரி (146), ரி.ராகுல் (153), பி.சஞ்சிகா (157), எஸ்.சிவநீபன் (127), வி.சாருஜா (134), பி.சுபேந்திரா (134), எஸ்.சிவநிரோஜினி (134), எஸ்.சஞ்சீபன் (129), வி.சிந்துஜா (148), ஆர்.சிந்துஜன் (156), கே.சுகேதா (134), ஜீ.சிவேந்திரன் (141), எம்.திவ்வியபாரதி (159), எஸ்.சிந்துஜன் (119), எம்.வைஸ்ணவி (118), பி.றீபவன் (139), ஜி.வைஸ்ணவி (123), ஆர்.திவாகரன் (118), பி.ஏ.நிரோஜன் (147), கே.தசானுசன் (126), ஜே.ஏ.வசந்தன் (171), வி.விதுசன் (172), ஜீ.ஏ.சுஜீவன் (150), வி.விவாஸ்கர் (147), ஆர்.கௌசன் (153),

கே.வைஷாலன் (139), ஏ.ஹட்சன் (118), எம்.வித்தகன் (124), ஏ.ஜேனுகானந் (150), ஆர்.வசீகரன் (125), எஸ்.ஜெறோம் (120), என்.விதுசன் (147), எஸ்.கிரிஷாந் (133), எச்.சக்கரியா ஜெறோபேட் (142), எஸ்.மௌறன் (134), வி.சேயோன் (140), பி.சஜீபன் (130), ஏ.உமாசங்கர் (127), பி.வினோத் (137), பி.வைகுந்தன் (125), வி.விதுசன் (138), ஆர்.அபியூகா (119), எம்.சி.சேரா (135), வி.கௌசிகா (159), எஸ்.ஜசிந்தா (131), ஜே.ஜெனனி (131), எஸ்.நிஷா (154), கே.பிரஷாந்தி (136), ஏ.ஜே.பிரியங்கா (122), எம்.சாந்தமரீன் (154), எஸ்.சர்மிலி (131), எஸ்.சுமித்திரா (141), வி.சிவதர்சிகா (126), எஸ்.சுமிதா (165), எஸ்.சவிதா (143). (ஒ-7-ரி)

தென்மராட்சி, மட்டுவில்

# இந்து மாநாடு ஞாபகார்த்தமாக கட்டப்பட்ட வீடுகள் கையளிப்பு

சாவகச்சேரி,ஜன.27

இரண்டாவது உலக இந்து மாநாட்டின் ஞாபகார்த்தமாக தென்மராட்சி, மட்டுவிலில் இந்து கலாசார அமைச்சின் நிதி உதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 10 வீடுகள் உரியவர்களிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன.


அமைச்சர் தி.மகேஸ்வரன் சம்பிரதாய முறைப்படி நாடா வெட்டி இந்த வீடுகளைத் திறந்துவைத்தார்.

"இரண்டாவது உலக இந்து மாநாட்டின் ஞாபகார்த்தமாக இந்த வீடு அமைக்கப்பட்டது" என்ற வாசகம் வீட்டுச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது.

இநத அங்குரார்ப்பண புதுமனைப் புகு விழாவில் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய அதிபர் மு.பாலசுப்பிரமணியம், கிராம சேவை உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய மண்டபத்தில் பாடசாலை அதிபர் மு. பாலசுப்பிரமணியம் தலைமையில் பொதுக் கூட்டமும் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், டாக்டர் திருமதி வி.புஸ்பராணி, மாணவி எஸ்.சுவர்ணயா, இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோர் உரைநிகழ்த்தினர். (ம-31)



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்துக்கு தொழில் அதிபர் எஸ். தவராசா குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்திக்கொடுத்துள்ளார். அதன் ஆரம்ப விழாவில் அவர் உரையாற்றுவதையும் அவரது பாரியார் கரவெட்டி கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.அம்பலவாணர், அதிபர் இ.இராகவன், இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர் எஸ். சிவகுருநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். *(படம் : வடமராட்சிச் செய்தியாளர்)*

## 30 வருடங்களாக திருத்தப்படாத வீதி

யாழ்ப்பாணம்,ஜன.27

புத்தூர் கிழக்கு, அறிவொளி வீதி சுமார் 30வருடங்களுக்கு மேலாக எந்தவித திருத்தவேலைகளும் மேற்கொள்ளப்படாத நிலையில் பாரிய குண்டும் குழியுமாக போக்குவரத்துக்கு உதவாத நிலையில் இருக்கிறது.

இதுபற்றி அப்பகுதி மக்கள் பல தடவை பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டும் எந்தவித கவனிப்புமில்லாத நிலையில் இருந்துவருவதாகவும் அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். அவ்வீதியால் சைக்கிளோ, மோட்டார் சைக்கிளோ கூட பயணம் செய்வதற்கு பெரும் சிரமப்படும் நிலையே காணப்படுகிறது. இப்பாதையூடாகச் செல்வோர் விபத்துக்களையும எதிர்நோக்க வேண்டியுள்ளது என அவ்வூர் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ம-15)

## தனயன் தாக்கி தந்தை காயம்!

மதுபோதையில் வந்த தந்தையைத் தனயன் தாக்கியதில் அவர் தலையில் பலத்த காயத்துக்கு உள்ளானார்.

சங்கானைப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த தந்தை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார்.

தினமும் மதுபோதையில் வரும் தந்தையால் ஒவ்வொருநாளும் குடும்பத்தில் சண்டை ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. சம்பவதினமும் போதையில் வந்த தந்தை, மகனுடன் சச்சரவுப்பட்டு அவரைத் தாக்கியுள்ளார். ஆத்திரமடைந்த தனயன் திருப்பித் தாக்கியதில் தந்தை தலையில் காயமடைந்தார்.

சங்கானைப் பொலீஸார் இருவரையும் எச்சரிக்கை செய்து விடுவித்தனர். (ம-29)

# அச்சுவேலி வைத்தியசாலையில் முக்கிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

வலி.கிழக்கு,ஜன.27

அச்சுவேலி சுற்றயல் கூறு வைத்தியசாலையில் முக்கிய மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனால் நோயாளர்கள் வெளியிடங்களிலேயே மருந்துகளை வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

ஆஸ்மா நோய்க்குப் பயன்படுத்தப்படும் கொலிடில் மருந்து, காய்ச்சலினால் பாதிக்கப்படும் நோயாளர்களுக்கான கொட்றிம் மருந்து, நெருப்புக்காய்ச்சலினால் பாதிக்கப்படும் நோயாளர்களுக்கான குளோரோபனிக்கல் மருந்து, சளி காய்ச்சலுக்கான எமக்சிலின் மற்றும் சலரோகத்திற்குரிய மருந்துகளுமே தட்டுப்பாடாக உள்ளன என்று கூறப்பட்டது.

நோயாளர்கள் தமது கிளினிக்குகளுக்குச் செல்லும்போது இந்த மருந்துகளை தனியார் கடைகளில் வாங்கும்படி கூறி மருந்துச் சிட்டைகள் வழங்கப்படுகின்றன. (ம-180)

# பிரான்பற்று பகுதிக்கு மின்வசதி தரக்கோரி அமைச்சருக்குக் கடிதம்

பண்டத்தரிப்பு - பிரான்பற்று கிராமத்தின் 95 சதவீதமான பகுதிகள் மின்சார வசதியின்றி இருளில் உள்ளன. இப்பகுதிகளுக்கு முழுமையாக மின்சார வசதியை ஏற்படுத்திக் கொடுக்குமாறு மானிப்பாய் பிரதேச சபைச் செயலாளர் இலங்கை மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் கருஜெய சூரியவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பிரான்பற்று கிராம மக்களுக்கு மின்வசதி ஏற்படுத்திக் கொடுக்க அனைத்துத் தரப்பினரும் தவறிவிட்டனர்.

தற்போது பிரான்பற்றில் 5 வீதமான - பிரதான வீதியையொட்டிய பகுதிகள் மட்டுமே மின் வசதி பெற்றுள்ளன.

மின்பெறாத 95 வீதமான பகுதிகள் கடந்த 50 வருடங்களுக்கும் மேலாக மின் வசதி இன்றி உள்ளன.

மின்வசதி இன்றி இருளில் உள்ள 23 வீதிகளின் பெயர், விவரங்களை நாவலர் சனசமூக நிலையத்தினர் பட்டியல் இட்டு வைத்துள்ளனர்.

பிரான்பற்று கிராமம் தற்போது அபிவிருத்தி அடைந்து வருகின்ற ஒரு கிராமம் ஆகும்.

எனவே, பாடசாலை மாணவர்களின் கல்வி நோக்கம் கருதி மேற்படி கிராமத்திற்கு உடனடியாக மின்வசதி செய்து தரவேண்டும் என்று மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் பி.விக்டர் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

மேற்படி கடிதத்தின் பிரதிகள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், இலங்கை மின்சார சபையின் வடக்குப் பிரதிப் பொது முகாமையாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைககப்பட்டுள்ளன. (ம-185)

# இளைஞர் குழுக்கள் இடையே மோதல்; 4வீடுகள், ஒரு கடை நொறுக்கப்பட்டன

## அரியாலைப் பகுதியில் சம்பவம்

இளைஞர் குழுவினரிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக நான்கு வீடுகளும், ஒரு கடையும் அடித்து நொறுக்கப்பட்டன. சம்பவத்தில் மூவர் காயங்களுக்கும் உள்ளாகினர்.

நேற்றுமுன்தினம் இரவு அரியாலை மத்தியில் இசசம்பவம் இடம்பெற்றது.

அரியாலை பகுதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கும் மற்றொரு கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கமே மோதல் நிலைக்கு இட்டுச்சென்றதாகக் கூறப்பட்டது.

பின்னர் கத்திகள், வாள்கள், பொல்லுகளுடன் ஓட்டோக்களில் வந்திறங்கியவர்களே அரியாலை மத்தியில் உள்ள வீடுகளின் ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொறுக்கியுள்ளனர்.

கனகரத்தினம் வீதியில் இரண்டு வடுகளும், மலர்மகள் வீதியில் சலூன் மற்றும் இரண்டு வீடுகளும் உடைக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் சம்பந்தமாக பாதிக்கப்பட்டவர்கள் யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேநேரம் - இச்சம்பவம் இடம்பெற்ற வீட்டுக்குள்ளும் அயல்வீடுகளுக்குள்ளும் புகுந்த - முகங்களைத் துணியால் மறைத்திருந்தவர்கள் அங்கிருந்த பெண்கள், ஆண்களை விரட்டியடித்ததாகவும் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் கூறுகின்றனர் (ம-86)

பெரியவிளான் பகுதியில்

# சட்டவிரோதமாக மின் பெற்ற ஐவருக்கு தலா 10ஆயிரம் ரூபா அபராதம்

இளவாலை,ஜன.27

இளவாலை, பெரியவிளான் பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று வந்த ஐந்து பேர் கடந்த 19 ஆம் திகதி திங்கட்கிழமை மின்சார சபையினரின் உதவியுடன் இளவாலைப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் கடந்த 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

நீதிவான் இவர்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

பெரியவிளானைச் சேர்ந்த முருகன் கிருபாகரன், ஞானமுத்து பத்திநாதர், பத்திநாதர் செபஸ்ரீன், செல்வநாயகம் குகதாஸ், சூசை அன்ரனி ஸ்ரலின் ஆகியோரே கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டவர்களாவர். (ம-8-48)

# தீவக வலயப் பாடசாலைகளில் மேற்பார்வைச் செயற்பாடுகள் துரிதம்

மண்டைதீவு,ஜன.27

தீவகக்கல்வி வலயம் அந்தப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் வருட ஆரம்பத்திலேயே மேற்பார்வைச் செயற்பாடுகளை துரிதமாக நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக .நியமிக்கப்பட்ட இரு மேற்பார்வைக் குழுக்கள், பாடசாலை மட்டக் கணிப்பீடு (S.B.A.) வலய மட்ட கண்காணிப்பு (Z.M.P.) மற்றும் பாடம தொடர்பான குழு மேற்பார்வை என்பவற்றில் ஈடுபட்டுள்ளன.

இந்தக் குழு வாரந்தோறும் நான்கு பாடசாலைகளை மேற்பார்வை செய்யத் திட்டமிட்டுள்ளது. தமது வழிகாட்டல் ஆலோசனை அறிக்கைகளை மேற்பார்வை முடிந்த கையோடு பாடசாலைகளுக்கு இக்குழு அனுப்பிவைக்கும்.

கணிப்பீட்டுப் புள்ளிகள், பரீட்சைப பெறுபேறுகளுடன் இணைக்கப்படுவதால் பொருத்தமான ஆலோசனைகளை நேரடியாக வழங்கவே நெருககமான மேற்பார்வை கையாளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.(ம-88)

# நெப்போலியன் வழியில் செயற்பட்டு நிர்வாகம் நடத்தியவர் தற்பரானந்தன்

## பாராட்டு விழாவில் தெரிவிப்பு

வலிகாமம் தெற்கு,ஜன.27

தான் அடைய விரும்பியதை தமது உதவியாளருடன் இணைந்து அவர்களைத் தன் நிலைக்குக் கொண்டுவந்து எப்படி மாவீரன் நெப்போலியன் சாதனைகளை மேற்கொண்டாரோ அதே வழியில் செயற்பட்டு நிர்வாகத்தைத் திறம்பட நடத்தியவர் தற்பரானந்தன்.

ஓய்வுபெற்ற உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தனின் சேவை நலன் பாராட்டு விழாவில் உரையாற்றிய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா மேற்கண்டவாறு கூறினார்.

உடுவில் கோட்ட அதிபர்களும், கோட்டக்கல்விப் பணிப்பாளர்களும் இணைந்து மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இப்பாராட்டு விழாவை நடத்தினர்.

தற்பரானந்தன் தம்பதிகள் இராமநாதன் கல்லூரி சிவன் ஆலயத்தில் இருந்து பான்ட் வாத்திய சகிதம் அழைத்துவரப்பட்டனர்.

உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் உரையாற்றிய க.தேவராஜா மேலும் கூறியதாவது:-

தறபரானந்தன் தாம் எப்பொழுதும் அணியும் உடையைப் போன்று அவரது மனமும் தூயவெள்ளை நிறமுடையது. எவருக்கும் தீங்குசெய்யவேண்டும் என்று நினைக்காமல் தமது கடமைகளை மேற்கொண்டவர் - என்றார்.

வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதன் தனது உரையில், நிர்வாகத்தில் இறுக்கமான போக்கு இருக்கவேண்டும். தற்பரானந்தனின் நிர்வாகத்தில் முறைப்பாடுகள் வருவது அரிது. மாணவர்களை சமயரீதியில் வழிப்படுத்தி சமூகப் பொருத்தப்பாட்டுக்குரியவர்களாக்கும் வகையில் செயற்பட வைத்தவர் - என்றார்.

உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தனது தலைமையுரையின்போது, பாடசாலைகளின் தேவைகள, வளங்கள் பற்றிய புள்ளி விவரங்களை எல்லாம் மனதிலே பதித்து நிறைந்த ஞாபகசக்தியுடன் செயற்பட்டவர். உரிய கடமைகளை உரிய வேளையில் செய்யவேண்டும் என்பதில் உறுதியுடையவர் - எனக் கூறினார்.

சிறுவயதில் இருந்தே ஆன்மீகச் சிந்தனைகளை வளர்த்து இளைஞர்கள் மத்தியில் சீரழிவுகள் ஏற்படாதிருக்கும் பொருட்டு சைவத்திருமுறை, பண்ணிசை, தொண்டுபடும் செயன்முறை போன்றவற்றில் போட்டிகளை நடத்தி வெற்றி கண்டவர் தற்பரானந்தன் என சமாதான நீதிவான் வி.பரிபூரணானந்த சர்மா தமது பாராட்டுரையின்போது கூறினார்.

ஓய்வுபெற்ற அதிபர்கள் மு.திருஞானசம்பந்தபிள்ளை, சே.இராசவல்லவன், அதிபர்கள் எஸ்.சர்வேஸ்வரன், க.சிவாஜி, எஸ்.சிவநடராஜா, சு.சண்முககுலகுமார் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர். (ம-152)




கடந்த ஆண்டு மட்டும்

# நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் ரூ. 30 லட்சம் செலவில் வேலைகள்

வலி.கிழக்கு,ஜன.27

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் கடந்த ஆண்டு மட்டும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியின் கீழ் 30 லட்சம் ரூபாவுக்கான 38 வேலைத் திட்டங்கள் செய்யப்பட்டுள்ளன என்று பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரு வீதிகள் திருத்தம், கல்வித் துறை சார்ந்த வேலைகள், சமூக நலன் கலாசார நடவடிக்கைகளுக்கான 11 வேலைத் திட்டங்கள், சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் 22 என்பனவே இந்த நிதி மூலம் செய்யப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-180)

# மலகூடம் கட்டக் கொடுத்த சிமெந்து வெளிச்சந்தையில்

மலசலகூடங்கள் இல்லாத வசதி குறைந்த மக்களுக்கு வழங்கவென இந்துசமய விவகார அமைச்சினால் வழங்கப்பட்ட சிமெந்து, சிலரால் வெளிச்சந்தையில் விலைக்கு விற்கப்பட்டுள்ளது. சிமெந்தைப் பங்கீடு செய்வதற்கு நியமிக்கப்பட்ட அமைப்புகளின் பொறுப்பற்ற செயலே இத்தகைய நிலைமை ஏற்படக் காரணம் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

யாழ்ப்பாணம் திருநகர் பகுதியிலேயே இவ்வாறு பல சிமெந்துப் பைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் ஏற்கனவே மலசலகூடம் இருக்கும் வீடுகளின் உரிமையாளர்களுக்குக் கூட சிமெந்து விநியோகிக்கப்பட்டதே இந்த நிலைமை ஏற்படக் காரணம் என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். சில இடங்களில் வெற்றுக் காணிகளின் உரிமையாளர்களுக்கும் சிமெந்து விநியோகிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உண்மையில் மலசலகூடம் இல்லாமல் உள்ள வீடுகளின் உரிமையாளர்கள் பலர் சிமெந்து பெறமுடியாத நிலைமையும் பல இடங்களில் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-15)

# அனைத்து ஒப்பந்தங்களுமே தமிழர்களை ஏமாற்றி விட்டன

## மண்டூரில் ஜோசப் எம்.பி.

கடந்த காலங்களில் சிங்கள ஆட்சியாளர்களினால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் அனைத்துமே தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டன. அவை எவ்வித நன்மையும் தரவில்லை.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் போது ஏனைய தமிழ்க்குழுக்களைப் போல் இந்திய வற்புறுத்தலுக்கு தலைவர் பிரபாகரன் அடிபணிந்திருந்தால் இன்று எமக்கு எதுவுமே மிஞ்சியிருக்காது.

- இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

மண்டூரில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றியபோது அவர் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளின் பலத்தைக கண்டுதான் ஆட்சியாளர்கள் சமாதானத்திற்கு வந்தார்கள். தமிழ் மக்களின் தொடர் இன்னலை உணர்ந்தே விடுதலைப்புலிகள் சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திலேயே படையினரின் பகுதி, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி என வரையறுக்கப்பட்டுள்ளது. ஒரு நாட்டின் தலைவரே புலிகளின் ஆளுகைக்குள் வடக்கு - கிழக்கில் கணிசமான பிரதேசம் இருப்பதை அங்கீகரித்துள்ளார். சிங்கள நாட்டின் தலைவராக ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ் நாட்டின் தலைவராக வே.பிரபாகரனும உள்ளதையே புரிந்துணர்வு ஒப்பந்தம் பறைசாற்றுகின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட சிங்களத் தலைவர் ஒருவர் தமிழ்நாட்டுப் பிரதேசமான வன்னிக்கு வந்து கைச்சாத்திட்டார். இது தமிழர்களுக்குக் கிடைத்தவெற்றி.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படுகிறது கூட்டமைப்பு புலிகளின் ஓர் அங்கம் நிர்வாக அலகு அமைக்கப்பட்டால் அதை செயற்படுத்துபவர்கள் புலிகளே. இவ்வாறு அவர் கூறினார்.

## கொழும்பு தெற்குப் பகுதியில்

# புதிய துறைமுகம் அமையவுள்ள இடத்தில் கடலுக்கடியில் பௌதிக மதிப்பீட்டு ஆய்வு

கொழும்பு தெற்குத்துறை முகத்தை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள கடல் பிரதேசத்தின் கடலுக்கடியிலான பௌதிக மதிப்பீட்டு ஆய்வு நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

துறைமுகக் கப்பல் துறையின் எதிர்கால சவால்களுக்கும், தேவைகளுககும் ஏற்றவகையில் கொழும்புதெற்கு புதிய துறைமுகத்தை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் ரவூப் ஹக்கீம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணித்திருந்தார். இதையடுத்து மேற்படி நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

பிரிட்டனின் ஸ்கொட் வில்சன் கர்க்பெட்ரிக் (Scott Wilson Kirk-patrick and Co. Ltd.) நிறுவனம் இந்தத் துறைமுகத்தை நிர்மாணிப்பதற்கான நிபுணத்துவ ஆலோசகராகச் செயற்பட்டு வருகின்றது. தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதேசத்தின் கடலுக்கடியிலான பௌதிக ஆய்வு மதிப்பீடுகளை சர்வதேச ரீதியாக பிரசித்தம் பெற்ற பிரித்தானியாவின் சீகோர் (Seacore) நிறுவனம் மேற்கொள்ளுகின்றது.

நீர் மட்டத்தில் இருந்து 20 மீற்றருக்கு கீழ் ஆழமான கடலுக்கடியில் மேலும் 20 மீற்றல் ஆழத்திற்கு அகழ்ந்து அங்குள்ள கற்களையும் மற்றும் கடற் பொருள்களையும் பரீட்சித்தல், நீர் அலைதாங்கி அமையவுள்ள, கடல் பிரதேசத்தின் கடலுக்கு அடியிலான நிலையை ஆய்வு செய்தல் போன்றன இப்பரிசோதனையில் உள்ளடங்குகின்றன.

கடலுக்கடியிலான அகழ்வு நடவடிக்கைகளுக்காக நடமாடும் மேடை ஒன்று பயன்படுத்தப்பட்டுள்ளது.

திட்டமிடப்பட்டுள்ள புதிய துறைமுகம் பாரிய கப்பல்களுக்கு சேவையை வழங்கக் கூடியதாக 12 இறங்குதுறைகளைக் கொண்டதாக அமையும். அதனை நிர்மாணிப்பதற்காக ஆயிரத்து 800 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தற்பொழுதுள்ள கொழும்புத்துறைமுகம் 6 இறங்கு துறைகளை மட்டுமே கொண்டுள்ளது.

புதிய துறைமுகத்திற்கான ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொளவதற்கு 14.4 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்படவுள்ளது. அதில 10 மில்லியன் டொலர்களை ஆசிய அபிவிருத்தி வங்கியும் மிகுதி 4.4 மில்லியன் டொலர்களை இலங்கைத துறைமுக அதிகார சபையும் செலவிடவுள்ளன.

தற்போது செயற்படுத்தப்படும் கடலுக்கடியிலான பௌதிக ஆய்வு நடவடிக்கைகளை 6 வாரங்களுக்குள செய்து முடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# முஸ்லிம் அரசியல் தலைமைகள் ஓரணியில் இணைவது அவசியம்

## அம்பாறை பள்ளிவாசல்கள் சம்மேளனம் வலியுறுத்து

வடக்கு - கிழக்குக்கு வெளியில் வாழுகின்ற முஸ்லிம்களின் அரசியல அபிலாஷைகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் முஸ்லிம் அரசியல் தலைமைகள் ஒன்றுபட்டு ஓரணியில் இணைய வேண்டும். அதிலும் குறிப்பாக வடக்கு - கிழக்கிலுள்ள முஸ்லிம் அரசியல் தலைமைகள் கருத்து வேறுபாடுகளையும் முரண்பாடுகளையும் மறந்து ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். குறைந்தபட்சம் அம்பாறை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் அரசியல் தலைமைகளாவது தமக்குள் உள்ள வேற்றுமைகளைக் களைந்து இணைய வேண்டும.

- இவ்வாறு முஸ்லிம் அரசியல் தலைமைகளைக் கோரும் தீர்மானத்தை அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்களின் சம்மேளனம் நிறைவேற்றியுள்ளது.

கடந்த சனிக்கிழமை கல்முனை ஜும்ஆ பெரிய பள்ளிவாசல், மேல் மாடியில் நடைபெற்ற சம்மேளனத்தின் மாதாந்தக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்களின் சம்மேளனத் தலைவர் மௌலவி ஏ.சி.எம்.புஹாரி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முஸ்லிம்களின் அபிலாஷைகளை, எண்ணக் கருத்துக்களை பிரதிபலிக்கும் வகையில் நாளிதழ் ஒன்றும், தனியான வானொலி அலைவரிசை மற்றும் தனியான தொலைக்காட்சி ஊடகம் ஒன்றும் ஏற்படுத்தப்பட வேண்டும். இவை அனைத்தும் முஸ்லிம் என்ற பெயரைத் தாங்கி வரக்கூடாது. ஏனைய சமூகங்களுக்கு முஸ்லிம்களின் செய்தியை எடுத்துக் கூறுவதோடு அந்தச் சமூகம் சார்ந்த கருத்துக்களையும் பிரதிபலிப்பதாக அமையவேண்டும்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மனிதாபிமானமற்ற முறையில் பகிடிவதை நடக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் மேலும் வலியுறுத்தப்பட்ட விடயங்கள் வருமாறு:-

முஸ்லிம் அரசியல் தலைமைகள் ஒன்றுபடவேண்டும் என்ற விடயத்தில் முன்னர் முஸ்லிம் தரப்பில் கலவிமான்கள், உலமாக்கள், பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள், பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள் என்றெல்லாம் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால், அவை தோல்வியைத் தழுவின.

ஆனால், இன்று பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஸ்ரீல.சு.கட்சியும் ஜே.வி.பியும் கூட்டுச் சேர்ந்துள்ளன.

அதேபோன்று, தமிழர் மத்தியில் ஒன்றுக்கொன்று விரோதமாகவும், குரோதமாகவும் செயற்பட்ட கட்சிகள், இயக்கங்கள் எல்லாம் பெரும்பாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அடிப்படையில் ஒன்று சேர்ந்திருக்கின்றன.

இந்த வகையில் முஸ்லிம்களாகிய நாம், முன்னர் இருந்ததிலும் பார்க்க இன்று நாம் பல்வேறு பிரிவுகளாகப் பிளவுபட்டிருக்கின்றோம்.

இன்றைய சூழ்நிலையில் முஸ்லிம் தலைமைகள் பிரிந்திருப்பதற்கு ஏற்ற தருணம் அல்ல. எப்படியாவது ஒன்றுபட்டு முஸ்லிம் மக்களின் வாக்கு வங்கியைத் தக்கவைத்துக் கொண்டு முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை வடக்கு - கிழக்கிற்கு உள்ளும் - கிழக்கிற்கு வெளியிலும் உறுதி செய்வேண்டும்.

இதனை அடைவதற்கு இன்றுள்ள ஒரே வழி முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து கொள்வதே. இது சாத்தியபடாதவிடத்து, தேசிய மட்டத்தில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை எப்படியாவது பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

### கட்டட நிர்மாணத்தில் பயிற்சி பெற்றோரை பதிய நடவடிக்கை

வலிவடக்கு,ஜன.27

கட்டட நிர்மாணத்துறையில் பயிற்சி பெற்றவர்களை பதிவு செய்வதற்கான முயற்சிகளை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினர் மேற்கொண்டுள்ளனர்.

கட்டடத்துடன் தொடர்புடைய தொழில் முயற்சியில் பயிற்சி பெற்றவர்களைப் பதிவுசெய்து வைப்பதன் மூலம் கட்டட வேலைகளுக்கு இவர்களைப் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும் என்பதால் இவர்கள் தொடர்பான விவரங்கள் திரட்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதேச அலுவலர் பிரிவுகளில் உள்ள வீடமைப்பு அலுவலர்களுடனோ அன்றி கிராம அலுவலர்களுடனோ தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெறுவதுடன் பதிவுகளையும் மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-86)


# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரும்புக் கதிரைகள் 75 விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.தேவராசா, நுணாவில் கிழக்கு, கல்வயல், சாவகச்சேரி. (27637)

### வீடு விற்பனைக்கு

ஆடியபன்பிட்டி வீதி, சாவகச்சேரியில் அமைதியான சூழலில் 5 பரப்புக் காணியுடன் கூடிய வீடு (கிணற்றுடன்) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு திருமதி அபாலசிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியை), பாலகிரி, கல்லடி ஒழுங்கை,சாவகச்சேரி. (27592)

### திருமண சேவை

1968 ஆம் ஆண்டு M.B.B.S., 1972 ஆம் ஆண்டு Teacher, 1972ஆம ஆண்டு லண்டன் Citizen மணமகன்களுக்குப் பொருத்தமான மணமகள்கள் தேவை. உடன்தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 101/1, ஓட்டுமடம் வீதி, சிவலிங்கப்புளியடி (K.K.S. வீதி), யாழ்ப்பாணம் (பதிவுக கட்டணம் யாவும் இலவசம்).(27659)

### கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் 28.01.2004 மாலை விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்: றாஜீவ், ஆனைக்கோட்டை சந்தி. T.P:3529, 2867, ஸ்பர்பன் ஜோச் சண்முகம் லேன், சங்கத்தானை. (27614)

தடுப்பூசி போடப்பட்ட தரமான சேவல் குஞ்சுகள் விலைரூபா15/= 02-02-2004 பிற்பகல் விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்றர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (27662)

### தவறிவிட்டது

ஒந்தாச்சி மடம், களுவாஞ்சிக்குடி என்னும் முகவரியுடைய அழகரெட்ணம் ரவிநாதன் என்பவரது தே.அ.அ. (792750990V) 22.01.2004 அன்று யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் க.பெரியதம்பி, நாரந்தனை வடக்கு என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (27663)

யாழ்ப்பாணம், நல்லூர், 130, இராசாவின் தோட்டம் வீதியைச் சேர்ந்த செ.நடேசபிள்ளை அவர்களுடைய சாரதி அனுமதிப்பத்திரம், மூக்குக் கண்ணாடி மற்றும் முக்கிய ஆவணங்கள் என்பன யாழ். சத்திரத்துச்சந்தியடியில் பையுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (27669)

மார்க்கம்பரை, கோப்பாய் வடக்கைச் சேர்ந்த பகீரதி மணிவண்ணன் என்பவரது தே. அ. அ. (835120325V), வி.அ.அ., மோட்டார் சைக்கிள் திறப்பு, சிறுதொகைப் பணம் அடங்கிய பேர்ஸ் 23.01.2004 அன்று யாழ். ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சிறிமுருகன் ஜுவல்லறி, 115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P.: 021-222 5965, 0777 06 7343. (27668)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

இரண்டு மாதங்கள் நிரம்பிய பூச்சி நீக்கப்பட்ட நல்லின டாஸ்கவுண்ட் (Dashound) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 819/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.:222 5401. (27667)

## அறிவித்தல்

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியிலுள்ள ரதி வாச்வேக்ஸ், என்னும் ஸ்தாபனத்தில் 2003ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் மணிக்கூடுகளைத் திருத்தத்துக்காக ஒப்படைத்தவர்கள் சிட்டை இல்லாவிடில் தங்கள் தே.அ. அட்டையைக் காண்பித்தும், சிட்டை உள்ளவர்கள் சிட்டையைக் காண்பித்தும் மணிக்கூடுகளை உடனடியாகப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

(35-14-18-21) முகாமையாளர்,
ரதிவாச் வேக்ஸ்,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (27656)


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

26 - 01 - 1933



27 - 01 - 1999

### திருமதி சிற்றம்பலம் நல்லம்மா

அம்மா அம்மா நீங்கள் மறைந்தது அன்று
ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்தன இன்று
அண்ணனும் இடையில் அடைந்தனரே மறுமை நாம்
ஆறவில்லை எம்மனத்தே எப்படி ஆற்றிடுவோம்?
வேண்டிடுவோம் அடைக நீர் சாந்தி என்று!

சந்த தோட்டம்,
புலோலி கிழக்கு. (27664)(34-14-16-21) தி.வனிதாகாந்தி.

## மரண அறிவித்தல்

### சுப்பையா மயில்வாகனம்

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் கச்சேரி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா மயில்வாகனம் அவர்கள் 24.01.2004 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சோபனத்தின் அன்புக் கணவரும் ரவீந்திரன் (பிரான்ஸ்), வசந்தமல்லிகா (இத்தாலி), செல்வேந்திரன் (டென்மார்க்), இராசமல்லிகா (நல்லூர்), இராசேந்திரன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கமலாதேவி (பிரான்ஸ்), கருணாநிதி (பிரான்ஸ்), தவயினி(டென்மார்க்), தவராசா (நல்லூர்), ரஜனி (சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெனனி, கஸ்தூரி, கயன், அனுசன், மயூரி, அபி, சிந்துஷா, அபிஷன், அபிராமி ஆகியோரின் அன்புப் பேரனும் தங்கம்மா, சின்னத்தங்கச்சி, அன்னலட்சுமி, சுந்தரம், இராசரத்தினம், காலஞ்சென்ற கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2004) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

92, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (27661)(32-14-16-21)

தகவல்:
த.தவராசா (மருமகன்).

# உதயன்

## புலிகளின் கருத்து என்ன?

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் சேர்ந்து கூட்டமைத்து தமக்குள் பொது உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டாலும் அவற்றுக்கு இடையில் முக்கியமான விடயங்களில் இன்னமும் இணக்கம் ஏதும் ஏற்படவில்லை என்பது தெளிவாக வெளிபபடுகின்றது. நாட்டின் தேசியப் பிரச்சினையில் அவற்றுக்கு இடையில் இணக்கம் ஏற்படவில்லை என்பதற்கு அப்பால் அத்தகைய விடயங்களில் அவை முரண்பட்டும் நிற்கின்றன.

இனப்பிரச்சினைக்கு எத்தகைய தீர்வு என்பதில் அவற்றுக்குள் உள்ள முரண்பாடு அவை செய்து கொண்ட ஒப்பந்தத்திலேயே அப்பட்டமாக இடம்பெற்றிருந்தது. இன்னஇன்ன விடயங்களில் புரிந்துணர்வு இல்லை என்பதை ஒப்புக்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் இதுவாகத்தான் இருக்கும்.

இந்த ஒப்பந்தத்தை அடுத்து சு.க. - ஜே.வி.பி. கூட்டிய கூட்டுச் செய்தியாளர் மாநாட்டில் ஜே.வி.பி. பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா சமாதானப் பேச்சுக்கள் குறித்து அதிரடிக் கருத்து ஒன்றை வெளியிட்டார்.

"சமாதானப் பேச்சு நடத்திய பிரதமர் பேச்சிலிருந்து விலகிவிட்டார். அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பும் தமது பங்களிப்பை இடைநிறுத்திவிட்டது. ஆகவே, பேச்சும் இல்லை; மூச்சும் இல்லை. யுத்தநிறுத்த உடன்பாடு செய்த பிரதமர் அந்தப் பொறுப்பிலிருந்து தாம் விலகிவிட்டார் என அறிவித்துள்ளார். எனவே, யுத்தநிறுத்த உடன்பாடும் காலாவதியாகிவிட்டது" - என்ற சாரப்பட ரில்வின் சில்வா தெரிவித்தார்.

ஆனால், அதை விழுந்தடித்துக் கொண்டு மறுத்துரைத்திருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. இதற்கென தனது ஏற்பாட்டில் - தாம் பங்குபற்றும் - விசேட கலந்துரையாடல் ஒன்றை 'ஐ' அலை வரிசையில் அவர் ஒளிபரப்புச்செய்தார். அதில் யுத்தநறுத்த உடன்பாடு தொடர்ந்தும் முழுஅளவில் பேணபபடுகின்றது என்பதையும் அது காலாவதியாகவில்லை என்பதையும் அடித்து - உறுதிபட - தெரிவித்தார் அவர்.

யுத்தநிறுத்த உடன்பாட்டைக் குழப்பும் எந்த நடவடிக்கைக்கும் தாம் இடமளிக்கப்போவதில்லை என்றும அவர் சூளுரைத்தார்.

நாட்டின் மிகமுக்கிய விவகாரத்தில் கூட்டுக் கட்சிகளிடையே நிலவும் முரண்பாடு இவ்வாறு துலாம்பரமாக வெளிப்படுகின்றது.

சு.க. - ஜே.வி.பி. உடன்பாடு கைச்சாத்தாகிவிட்டாலும் சு.க.தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க ஜே.வி.பியிலிருந்து சற்று ஒதுங்கியே நிற்கின்றார் என்ற சாரப்படச் செய்திகள் வெளியாகி வருகின்றன. அது உண்மையானால் நல்லது. சிங்களப் பேரினவாதச் சகதியில் சு.க. இன்னும் முழுமையாக மூழ்கிவிடவில்லை என்ற ஆறுதலை அது தரும்.

ஆனால், "ஆட்சி அதிகாரத்தோடும் சிங்கள மக்களின் ஆணையோடும் வரும் எந்தச் சிங்கள அரசோடும் பேசுவதற்குப் புலிகள் தயார்" - என்று புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செலவனும், புலிகளின மதியுரைஞரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கமும் தெரிவித்த கருத்துக்களை சு.கவின் தலைமை இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ளவில்லை. அது, இவ்விடயம் குறித்து ஜனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் பகிரங்கமாகத் தெரிவித்த கூற்றுக்களில் வெளிப்பட்டுள்ளது.

சு.க.- ஜே.வி.பி. கூட்டை விமர்சித்து மதியுரைஞா பாலசிங்கம் தெரிவித்த கருத்துக்களை, அவர் முன்னுக்குப்பின் முரணான விடயங்களைக் கூறிக் குழப்புகின்றார் என்றும், தமிழ்ச்செல்வனின் கருத்துக்கு மாறாக விடயங்களை முன்வைக்கின்றார் என்றும் கதிர்காமர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இது விடயத்தில் மதியுரைஞர் பாலசிங்கமும், தமிழ்ச்செல்வனும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கூறிய கருத்துக்கள் அனைத்தும் அட்சரம் பிசகாமல் ஒன்றுதான். அவற்றில் முரண்பாடோ, மாற்றமோ, அர்த்த வேறுபாடோ இல்லவே இல்லை. அவற்றை கதிர்காமர் புரிந்துகொண்டதில்தான் தவறு உள்ளது போலும்!

புலிகளுடன் மட்டும் சமாதானப் பேச்சு நடத்துவதற்குச் சிங்கள மக்களின் ஆணையைப் பெற்றுவரும் எந்தக் கட்சியுடனும் பேசுவோம் என்றுதான் இருவரும் கூறியிருந்தார்கள்.

சமாதானப் பேச்சு நடத்தவே கூடாது. இராணுவத் தீர்வே ஒரேவழி என்று பேரினவாதப் போக்கில் முழங்கும் ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்துகொண்டு எவ்வாறு சமாதானப் பேச்சுக்கு மக்கள் ஆணையைப் பெறமுடியும்? அதைத்தான் - அதன் விளைவைத்தான் - பாலசிங்கம் தமது விமர்சனக் கூற்றில் வெளிப்படுத்தியிருந்தார்.

ஜே.வி.பியுடன் கூட்டையும் பேணிக்கொண்டு, புலிகளுடன் பேச்சும் நடத்தவேண்டும் என்று ஜனாதிபதியும் அவரது அணியினரும் நினைத்தால் -

தமிழர்களின் அபிலாஷைகளை மதித்து, அவர்களின் ஏக மற்றும் அதிகாரபூர்வப் பிரதிநிதிகளாகப் புலிகளை அங்கீகரித்து, அவர்களுடன் அமைதித் தீர்வுக்கான சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்குத் தேர்தல் மூலம் சிங்கள மக்களினது ஆணையையும், தமது கூட்டுக் கட்சிகளினது இணக்கத்தையும் பெற்றுவர வேண்டும்.

அதைத்தான் மதியுரைஞர் பாலாவும், அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல் வனும் புலிகள் தரப்பின் கருத்தாக முன்வைத்திருக்கின்றார்கள்.

யாழ். குடாநாட்டுக்கான

# அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் இந்த வருட நிதி ஒதுக்கீட்டில் வெட்டு

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ். குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த மக்களின் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளுக்கென அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஒதுக்கும் நிதி இந்த ஆண்டு மிகப் பெருமளவில் குறைககப்பட்டுள்ளது.

கடந்த வருடம் யாழ்ப்பாணத்துக்கு 11 கோடியே 20 லட்சம ரூபாவை ஒதுக்கிய அகதிகளுக்கான ஐநா. தூதரகம் இந்த வருடம் ஒரு கோடியே 50 லட்சம் ரூபாவை மட்டுமே ஒதுக்கியுள்ளது.

குடாநாட்டில் மற்றும் பல அமைப்புக்கள் மக்களுக்கான உதவித் திட்டங்களைச் செயற்படுத்த ஆரம்பித்திருப்பதும் இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வீடுகள் மற்றும் மலசலகூடங்கள் அமைப்பதற்கும் சமூக மன்றங்களைப் புனரமைப்பதற்கும் என 140 திட்டங்களை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் நடைமுறைப்படுத்தியது. இதற்காக 11 கோடியே 20 லட்சம் ரூபாவை ஒதுக்கியிருந்தது.

கச்சாய், கோயிலாக்கண்டி, உடுவில், சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் இத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. திட்டங்களில பெரும்பாலானவை தற்போது முடிக்கப்பட்டுள்ளன. சில திட்டங்கள் இன்னமும் பூர்த்தி செய்யப்படாதுள்ளன.

இந்நிலையில், இந்த வருடத்துக்கு ஒரு கோடியே ஐம்பது லட்சம் ரூபாவை மட்டுமே அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் குடாநாட்டுக்கு ஒதுக்கியுள்ளது.

இந்தநிதி மூலம் வீடமைத்தல் போன்ற பெரிய திட்டங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படமாட்டா. பின்தங்கிய பிரதேச மக்களுக்கான பயிற்சிகள் மற்றும் சுயதொழில் வாய்ப்புத் திட்டங்கள் மட்டுமே நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் அகதிகளுக்கான ஐநா. தூதரகத்தால் ஒதுக்கப்பட்ட நிதி புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சு மூலமே செலவிடப்பட்டது. இம்முறை இந்த நிதி அந்த அமைச்சு மூலம் ஒதுக்கப்படமாட்டாது என்றும் அறியவந்தது.

(ம-3)

# தமிழரின் பொது விழாவாக தைப்பொங்கலைப் பிரகடனப்படுத்தப்பட வேண்டியது அவசியம்

## பொங்கல் விழாவில் ஆசிரியர் செல்வவடிவேல் கருத்து

யாழ்ப்பாணம்,ஜன.27

"உலகெங்கும் பரந்து வாழுகின்ற தமிழர்களை இணைத்து வைத்திருப்பது மொழி ஒன்று மட்டுமே. தமிழ் இனம் இந்த உலகத்தில் இருந்து மறைந்துவிடாமல் இருக்கவேண்டுமானால் அதன் மொழி அழியாதிருக்கவேண்டும். மொழி அழிந்துவிடாமல் பாதுகாக்கப்பட வேண்டுமானால் கலாசாரம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். தமிழர்தம் உறவைப் பலப்படுத்த வேண்டுமானால், சமய பேதங்களுக்கு அப்பால் சகலருக்கும் பொதுவான தமிழ் விழாவாக பொங்கல் திருநாள் தமிழர் விழாவாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டியது அவசியம்.

- இவ்வாறு தெரிவித்தார் ஆசிரியர் இரா.செல்வவடிவேல்.

திருமறைக் கலாமன்றத்தின் நடத்திய பொங்கல் விழாவின் மாலைக் கலைநிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புதிதாகப் புனரமைக்கப்பட்ட அரங்க மேடையில் நடந்த இந்த விழாவில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய நாடுகள் சபை அண்மையில் விடுத்த பிரகடனம் ஒன்றில் தமிழ் மொழி விரைவில் அழிந்துவிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மொழியியல் ரீதியாக இந்த நிறுவனம் நடத்திய ஆய்வின் மூலமே இது கண்டறியப்பட்டுள்ளது. மிகவிரைவில் அழிந்துவடக்கூடிய பல மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது மொழி அழிந்துவிடாமல் பாதுகாக்கப்பட வேண்டுமானால், தமிழ் இனம் அழியாதிருக்க வேண்டுமானால், நாம் எமது கலாசாரம் அழிந்துவிடாமல் பாதுகாக்கவேண்டும். ஐரோப்பிய நாடுகளில் குடியேறிய எம்மவர்கள் அந்த நாடுகளில் மொழி மற்றும் கலாசாரத்தால் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இங்குள்ள இளைய தலைமுறையினர் மத்தியில் ஆங்கில கலாசார மோகம் அதிகம் உள்ளது.

ஆங்கிலம் கூடாதென்று நான் கூறவில்லை. அது எனது கருத்துமல்ல. ஆனால், நாம் எமது கலாசார விழுமியங்களை இழந்துவிடக்கூடாது. பிற நாட்டு மோகத்தில் அமுங்கிவிட்டால் எமது கலாசாரத்தை, பண்பாட்டை, மொழியை இழந்தவர்கள் ஆகிவிடுவோம்.

தமிழர்களது விழாக்களில் எந்த ஒருவிழாவும் சமய வேறுபாடுகளுக்கப்பால் சகலராலும் கொண்டாடப்படுவதில்லை. தைப் பொங்கல் மட்டுமே அனைவராலும் கொண்டாடும் தமிழ் விழாவாக பிரகடனப்படுத்தக்கூடியதொன்றாகும்.

இதை உழவர் திருநாள் என்று கூறுவார்கள். குடாநாட்டில் எத்தனை உழவர்கள் காணப்படுகிறார்கள். விவசாய நிலங்கள் வீணாகக் கிடக்கின்றன. இதற்கு வெளிநாட்டு மோகமும் ஒரு காரணம் - என்றார் அவர்.

இந்த விழாவின் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட குரு முதல்வர் நீக்கிலாஸ் அடிகள் உரையாற்றும்பொழுது தெரிவித்ததாவது:-

பொங்கல்விழா உழவர் திருநாளாகும். இந்த உலகம் வாழ உழைப்பவர்கள் அவர்கள். தாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ்விப்பவர்கள். புதுநெல் எடுத்து அவர்கள் பொங்கி மகிழும் இந்த நன்நாளில் அவர்களால் வாழ்ந்து கொண்டிருக்கும் மற்றவர்களும் இந்த விழாவை விழாவாகக் கொண்டாடி மகிழ்வதும் மகிழ்ச்சி தெரிவிப்பதும் மிகப் பொருத்தமானதாகும். - என்றார்.

கலைநிகழ்வாக, மலர் அஞ்சலி, கும்மி, கண்ணன் - இராதை நடனம், கவியரங்கம் மற்றும் கிராமியப் பாடல் நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம-88)

# வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 10 மாவட்ட வைத்தியசாலைகள்

காத்தான்குடி,ஜன.27

உலகவங்கி - ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் நிதியுதவியுடன் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் புதிதாக 10 மாவட்ட வைத்தியசாலைகள் நிறுவப்படவுள்ளன.

இத்தகவலை வடக்கு - கிழக்கு மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எம்.குமாரவேற்பிள்ளை தெரிவித்தார்.

இதேவேளை -

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் புதிதாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையொன்றும் அமைப்பதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதற்கான பரதான காரணம் இம் மாகாணத்தில் கடமைபுரிய வைத்தியர்கள முன்வராமையே ஆகும்.

179 வைத்திய அதிகாரிகள் நியமனம்பெற்றதில் வாகரைக்கு மாத்திரம் ஒரு வைத்திய அதிகாரியை நியமிக்கமுடிந்தது. வடக்கு - கிழக்கில் பணிபுரியத் தமிழர்களும் முன்வராதது மிகவும் வருந்தத்தக்க விடயம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம)

### நாளை

தை 14
புதன்கிழமை
(28.01.2004)
திதி : ஸப்தமி
பின்னிரவு 01.57 வரை
நட்சத்திரம்: ரேவதி
பகல் 9.49 வரை
சுபநேரம்: 05.06 - 06.36
ராகுகாலம்: 12.36 - 2.06
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

அகந்தையை விட்டவன் கருணை உள்ளம் பெறுவான்.

# பொதுநலவாய அமைப்பின் தெற்காசிய அதிகாரி இலங்கை வருகின்றார்

கொழும்பு,ஜன.27

பொதுநலவாய அமைப்பின் தெற்காசிய பிரிவின் இலங்கை விவகாரங்களுக்குப் பொறுப்பாக அண்மையில் நியமிக்கப்பட்ட செல்வி ஹத்தரின் கிளிவ் இன்று இலங்கைக்கு விஜயம் மேற கொள்கிறார்.

இந்த விஜயத்தின் ஒரு அங்கமாக இந்து விவகார அலுவல்கள் அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரனை அவர் சந்தித்து இலங்கையின் இன்றைய அரசியல் விவகார நிலைமைகள் குறித்துக் கலந்துரையாடுவார்.

இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் ஸ்டிபன் ஈவான்ஸும் இச்சந்திப்பில் கலந்துகொள்வார். (ம-3)

# இந்தியத் தமிழ் பௌத்த பிக்கு வன்னி அகதிகளுக்கு உதவி

கொழும்பு,ஜன.27

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தனவின் வேண்டுகோளுக்கிணங்க அமெரிக்காவில் வசிக்கும் இந்தியப் பாரம்பரியமுள்ள தமிழ் பௌத்த பிக்கு பண்டித்த நந்தாசாரிய தேரர் இலங்கை வந்துள்ளார்.

இலங்கையில் வாழும் அகதிகளுக்கு உதவிபுரியும் நோக்குடனேயே இவரின் இந்த விஜயம் அமைந்துள்ளது. இதன்படி, இவர் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் வசிக்கும் அகதிகளுக்கு உதவிசெய்யப் பல்வேறு மனிதநேய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளார்.

2002ஆம் ஆண்டும் நந்தாசாரிய தேரர் இலங்கைக்கு விஜயம் செய்தார். அவ்விஜயத்தின் போது, அமைச்சர் ஜயலத் ஜயவர்தன புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுக்கு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க், இவருக்கு முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள அநாதை இல்லங்களைச் சென்று பார்வையிட சந்தர்ப்பம் கிடைத்தது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின சமாதானக் காரியாலத்தின் பொதுப்பணிபபாளர் புலித்தேவன் நந்தாசாரிய தேரரின் விஜயம் வெற்றிகரமாக அமைய தனது ஒத்துழைப்பை வழங்கியிருந்தார்.

நந்தாசாரிய தேரர் 6 ஆயிரம் ஆதரவற்ற குழந்தைகளுக்கு இம்முறை தொலைக்காட்சிப் பெட்டி, மின்னியக்கி, வீசீ.ஆர், வீசீடி கணனி போன்றவற்றை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளார். இதனை அறிந்த பிரதமர் பாராட்டுத்தெரிவித்ததோடு, இவரது இந்த மனிதநேய நடவடிக்கைகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்துகொடுக்குமாறு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவிடம் கேட்டிருக்கிறார். நந்தாசாரிய தேரரின் மனித நேய நடவடிக்கைகளுக்கு மீண்டும் ஒத்துழைப்பு வழங்குமாறு புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுக்கு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ம)

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி ஆசிரியை திருமதி ஏ.சிவாஜினி
அவர்களின் தந்தை

**அமரர் நல்லையா சிவப்பிரகாசம்**

அவர்கள் காலமானதால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதலைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக்கழகம்,
(27684)(34-14-16-32) யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.

## துயர் பகிர்கின்றோம்

எமது விளையாட்டுக்கழக உறுப்பினரான
திரு.மகாலிங்கம் சந்திரமோகன் அவர்களின்
அன்புச் சகோதரி **செல்வி ம.சாந்தினி** அவர்கள் 24-01-2004 அன்று அகாலமரணமடைந்த செய்திகேட்டு அதிர்ச்சியும் மனவேதனையும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். இவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினரின் துயரத்தை நாமும் பகிர்ந்துகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதயசூரியன் விளையாட்டுக்கழகம்,
(சி-32948)(14-16-32) வத்திராயன் வடக்கு, தாளையடி.

## துயரில் இணைகின்றோம்

மலர்வு 28 - 07 - 1976



உதிர்வு 24 - 01 - 2004

**செல்வி சாந்தினி மகாலிங்கம்**
இமையாணன், கரணவாய்

செல்வி சாந்தினி மகாலிங்கம் அவர்களின் திடீர் மறைவினைக் கேட்டு பேரதிர்ச்சி அடைகின்றோம். அவரை இழந்து நிற்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் இணைகின்றோம். அன்னாரின் பாதங்களில் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

(சி-32953)(32-14-16) பணியாளர்கள், கணக்காய்வுப் பகுதி.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 30 - 12 - 1917



உதிர்வு 29 - 12 - 2003

**அமரர் வேலுப்பிள்ளை பொன்னர்**

அன்போடும் பண்போடும் ஆதரவு காட்டி
என்றுமே எங்களுக்கு நல்ல பல வழிகாட்டி
மனிதருள் தெய்வமாய் வாழ்ந்திட்ட ஐயாவே!
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நினைவஞ்சலி நிகழ்வும் நாளை (28.01.2004) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வுகளில் பங்குபற்றி அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, நண்பகல் நடைபெறுகின்ற மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*வரியப்புலம்,*
*சுன்னாகம்.* (27685)(32-14-16) - குடும்பத்தினர்.

## மூன்றாண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 1959 - 07 - 22



ஆண்டவன் அடியில் 2001 - 01 - 30

**அமரர் வல்லிபுரம் சிவானந்தன்**
**(வரணியூர் சிவா)**

பாசமாய் வளர்த்த எங்கள் டடாவே
பாரினில் நீங்களின்றித் தவிக்கின்றோம்!
ஏற்றமுடன் எமை வாழவைத்துவிட்டு
எங்கே சென்றீரோ?

*பருத்தித்துறை வீதி,*
*கொடிகாமம்.* (27687)(32-14-16) *உங்கள் நினைவில் வாடும்:* மனைவி, பிள்ளைகள்.

## விபத்தில் இளைஞர் காயம்!

யாழ்ப்பாணம்,ஜன.27

ஹயஸ்-மோட்டார் சைக்கிள் விபத்திற்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

அல்லைப்பிட்டிச் சந்திக்கண்மையில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த நடராசமணியம் சிவகுமார் (வயது 23) என்ற இளைஞனே படுகாயம் அடைந்து யாழ்.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்.நோக்கி வந்த ஹயஸ் வானுடன் இவர் விபத்துக்குள்ளாகினார் என்று தெரிவிக்கப் பட்டது. (ம-6)

## வெள்ளைப்பூரான் கடித்து யுவதி உயிரிழந்தார்!

யாழ்ப்பாணம்,ஜன.27

வெள்ளைப்பூரான் கடித்து யுவதி ஒருவர் நேற்று யாழ். வைத்திய சாலையில் உயிரிழந்தார்.

கெருடாவில் தொண்டமனாற்றைச சேர்ந்த ஜீவரட்ணம் சுகந்தினி (வயது27) என்ற யுவதியே உயிர் இழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை யாழ். வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக கப்பட்டிருந்த இவர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார்.

உயிரிழந்த யுவதியின் சடலம் விசாரணையின் பின்னர் நேற்று உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-6-15)

## கலைப்பீட புதுமுக மாணவர்களுக்கு வழிகாட்டல் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடத்துக்கு அனுமதி பெற்றுள்ள புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வு, நாளை புதன்கிழமை காலை 9.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

பதில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் துணைவேந்தர், சிரேஷ்ட மாணவர், ஆலோசகர், பதிவாளர், நூலகர், மாணவர் ஒன்றியத் தலைவர் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

நிகழ்வில் கலந்துகொள்ளும் மாணவர்கள் காலை 8.45 மணிக்கு முன் சமுகந்தரவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

இந்த வழிகாட்டல் நிகழ்வு அடுத்தமாதம் 6ஆம் திகதிவரை தொடர்ந்து இடம்பெறும். (ம-3)

## சமய சந்நிதி

யாழ்ப்பாணம்,ஜன.27

ஏழாலை தெற்கு களபாவோடை வசந்த நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 5 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ம-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.27

பொலிகண்டி கந்தவனம் ஸ்ரீ கல்யாணவேல் சுவாமி ஆலய மாணவாளக்கோல விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகும். மாலை 5 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெறும் (ம-ரி)

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம்.ஜன.27

தீவக கல்வி வலயத்தினால் தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை ஆசிரியர் தரம் 2-II, 2-I,ஒன்று ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் தமது விண்ணப்பங்களை அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் தீவக வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பிவைக்குமாறு கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ம-10)

## திருத்தம்

கடந்த 22ஆம் திகதி உதயனின் 10ஆம் பக்கத்தில் வெளியான *'நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பதவி வெற்றிடங்கள்'* தொடர்பான விளம்பரத்தில்-

எழுதுநர் 302/15 என்ற பதவி, எழுதுநர் 392/15 என்று தவறாக அச்சாகிவிட்டது. அதனைத் திருத்த வாசிக்கவும். (ஆ-ர்)

## கண்ணீர் அஞ்சலி

காரைநகர் உதவி அரசாங்க அதிபர்
வே.சாம்பசிவம்
அவர்களின் அன்புத் தாயார்

**வேலுப்பிள்ளை பொன்னம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
உதவி அரசாங்க அதிபர் பணிமனை.
(C 32945)(14-16-32) காரைநகர்.

## இவரைக் காணவில்லை

*தேவமாதா கோயிலடி, கரவெட்டி தெற்கைச் சேர்ந்த*

**அன்ரனி இம்மனுவேல் லியோ சுதர்சன்**



*என்பவரை கடந்த 16.01.2004 வெள்ளிக்கிழமை முதல் காணவில்லை. சித்தசுவாதீனம் உள்ள இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு அறியத் தரவும்.*

மொடேண் ஸ்ரோர்ஸ், நெல்லியடி.
(27682)(35-14-16-32) ☎ 0777 111011

## வேலையாள்கள் தேவை

K.M.P அசோசியேட்ஸ் எனும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவைப்படுகின்றனர்

★ மேசன்
★ கூலி
★ வெல்டிங்

மேற்படி வேலையாள்களின் திறமைக்கேற்ற சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்புகொள்வோர் 27.01.2004 காலை 8.00 - 9.30 மணிவரையில் தொடர்புகொள்ளலாம்.

தொடர்பு:- K.M.P. அசோசியேட்ஸ்
95, பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P 0777 - 110285 (27686)(35-14-16-32)

## PATRICIAN INSTITUTES

**பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்**
**கணனி புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**ஆரம்பம்: 02-02-2004**

| | DURATION |
|---|---|
| 1) INTERNET & E-MAIL | 1MONTH |
| 2) DIPLOMA IN INTERNET TECHNOLOGY | 5MONTHS |

இத்துடன் ஏனைய பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.

மேலதிக விவரங்களுக்கு:
பதிவாளர்,
பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம்
59, சென்.பற்றிக்ஸ் வீதி,
(C/32946) (26-14-16-32) யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்

### திருமதி மனோன்மணி சிவஞானசுந்தரம்

தொல்புரம், வழக்கம்பரையைச் சேர்ந்த திருமதி மனோன்மணி சிவஞானசுந்தரம் நேற்று (26.01.2004) திங்கட்கிழமை சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் அமரர் சிவஞானசுந்தரத்தின் அன்பு மனைவியும் தொல்புரம் துரையப்பா அன் சன்ஸ் உரிமையாளரும் பிரபல வர்த்தகருமான காலஞ்சென்ற துரையப்பா - ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் அமரர் இராசரத்தினம் மற்றும் நடராசா (துரையப்பா அன் சன்ஸ் உரிமையாளர்கள்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் லீலாவதி, விமலாதேவி, பத்மாதேவி (துரையப்பா றேடர்ஸ், தொல்புரம்), சதாசிவப்பிரகாஸ், கணேசப்பிரகாஸ் (விரிவுரையாளர், மொறட்டுவப் பல்கலைக்கழகம்), நிர்மலாதேவி (டாக்டர், ஆயுர்வேத வைத்தியசாலை, வலி.மேற்குப் பிரதேசபை), துரையப்பா (ஆசிரியர், சர்வதேசக் கல்லூரி, கொழும்பு), சுசீலாதேவி , வாசுகி (ஆசிரியை, தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாசாலை), இந்திராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மநாதன் (முன்னாள் அதிபர், யா/விக்ரோறியாக் கல்லூரி), விக்னேஸ்வரராசா (மேற்பார்வையாளர், வைத்திலிங்கம் கொம்பனி, கொழும்பு), அமரர் சண்முகசுந்தரம் (உரிமையாளர், R.T.Tex மின்தறி ஆலை, தொல்புரம்), சந்திரகுமாரி (டாக்டர்/போதனாவைத்தியசாலை, கொழும்பு), சண்முகநாதன் (பிரதி அதிபர், யா/விக்ரோரியாக் கல்லூரி), திலகேஸ்வரி, உதயபாலன் (ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் இராகவன் (கைத்தொழில் திணைக்களம், கச்சேரி, யாழ்.), கேதீசன், மயூரதன், விக்னா, தமிழினி, கஜமுகன், மாதங்கி, ஜனனி, சாரங்கன், சரண்யா, துதிலன், குகவர்ணி, கார்த்திகேயன், கோபி ஆகியோரின் பேர்த்தியும் மாதுளனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2004) செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*துரைபவம்,*
*தொல்புரம், சுழிபுரம்.* (27691)(30-14-16-32) சதாசிவப்பிரகாஷ் (மகன்)

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# குடாநாட்டு நீர், மண் வளங்களை பாதுகாக்கத் திட்டம் ஒன்று அவசியம்

**யாழ்.** குடாநாட்டின் துரித அபி விருத்தி பற்றிப்பேசப்படுகின்ற இந்த வேளையில் நீர்வளம், நிலவளம் பேணிப் பாதுகாக்கப்படவேண்டியது அவசிய மாகும். குடாநாட்டின் நிலத்தடி நீர் மிக மோசமாக உவர்நீராக மாறிவருகின்றது. கடல் நீரேரிகளை அண்டிய விளை நிலங்கள் உவர் நிலங்களாக மாறி வருகின்றன. இவற்றினைத் தடுத்து நிறுத்தி உவர்நிலங்களை விளை நிலங்களாக மாற்றும் திட்டத்தில் வெப் திட்டம் வெற்றி கண்டிருந்தாலும், அது தொடர்ந்து முன்னெடுக்கப்படவில்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தவரையில் அது சுண்ணாம்புக் கற்பிரதேசமாகவும், சமநிலைப் பிரதேசமாகவும் இருக்கின்றது. குடாநாட்டின் ஒருபாகமாயினும் முப்பது அடிக்கு மேல் உயர்ந்திருக்கவில்லை. இதனால், ஆறுகள் இங்கில்லை. ஆழக கிணறுகள் மூலம் தரைக்கீழ் நீரைப் பயன்படுத்தும் வழக்கமே இங்கு இருந்து வருகின்றது

குடாநாட்டினுள் ஊடறுத்தபடியாக இரண்டு கடலேரிகளும் குடாநாட்டிற்குத் தெற்கே இரண்டு பெரிய கடலேரிகளும் காணப்படுகின்றன.

# கமமும் புலமும்

தயாரிப்பு: ஜெயஸ்ரீ

### கடலேரிகள்

★ வடக்கே காங்கேசன்துறைக்கும் பருத்தித்துறைக்கும் மத்தியிலிருந்து தென்கிழக்கு நோக்கி வடமராட்சி கடலேரி பரந்திருக்கின்றது. கடலுடன் இணையும் இதன் வடபகுதி தொண்டமனாறு எனப்படுகின்றது.

★ யாழ்ப்பாணம் நகருக்கு கிழக்கே ஏறத்தாழ நான்கு மைல் தூரத்திலிருந்து வட கிழக்கு நோக்கி உப்பாறு எனப்படும் கடலேரி பரந்திருக்கின்றது.

★ ஆனையிறவுப் பாலத்திற்கு மேற்கே இருப்பது யாழ்ப்பாணக் கடலேரி.

★ ஆனையிறவுப் பாலத்திற்குக் கிழக்கே இருப்பது ஆனையிறவுக் கடலேரி.

இந்தக்கடலேரிகளின் உப்புநீரை நன்னீராக்கி நீர்ப்பாசனத்திற்கு ஏற்றதாகச் செய்வதற்கும் கடலேரியைச் சூழவுள்ள உவர்நிலங்களை விளை நிலங்களாக மாற்றுவதற்கும் யாழ்ப்பாணக்கடலேரித்திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டம் உருவாகுவதற்கு ஆங்கிலேயர் இலங்கையை ஆண்ட காலத்திலேயே வடமாகாண ஆளுநர்களாக இருந்த பலராலும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

1920ஆம் ஆண்டளவில் அப்போதைய ஆங்கிலேய அரசின் வடமாகாண ஆளுநரின் சிபாரிசின்படி மாதிரித் திட்டம் ஒன்று வடமராட்சிக் கடலேரியில் பரீட்சித்துப்பார்க்கப்பட்டது. மூன்று வருடங்களின்பின் இதன் பயனை ஆராய்ந்தபோது கரவெட்டி கிழக்கு, துன்னாலை தெற்குப் பகுதிகளில் பல புதிய விளைநிலங்கள் உருவாகியிருந்தன. இதனால், நெல்விளைச்சலின் அளவு அப்பகுதியில் அதிகரித்தது. கோடை காலத்தில் ஆடு, மாடுகள் கடலேரி நீரை அருந்தக்கூடியதாக இருந்தது. கடற்கரையோர புல் வெளிகளில் புல் செழித்து வளரத் தொடங்கியது. அப்பகுதியை அண்மித்துள்ள பல கிணறுகள் நன்னீர் நிலைகளாக மாறின.

இத்திட்டத்தினால் பல நன்மைகள் ஏற்பட்டமையால் ஏனைய கடல் நீரேரிகளிலும் இத்திட்டத்தை மேற்கொள்ள முடியும் என்றகொள்கை உறுதியடைந்தது. இதனடிப்படையில் 1930ஆம் ஆண்டு சட்டநிர்வாகச் சபை உறுப்பினரான பாலசிங்கம் என்பவரின் வற்புறுத்தலால் இத்திட்டத்தை ஆராய்வதற்கு நீர்ப்பாசனப் பொறியியலாளரான வெப் என்பவர் நியமிக்கப்பட்டார்.

1945ஆம் ஆண்டு அவரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை 'பாலசிங்கம் - வெப்திட்டம்' என்ற பெயர் பெற்றது.


வெப் அறிக்கைப்படி குடாநாட்டுக் கடலேரிகளின் நீரேற்றுப்பரப்பளவு: வடமராட்சி கடலேரி 115 சதுரமைல் ஆகவும், உப்பாறு 85 சதுரமைல் ஆகவும் இருந்தது.

கடலேரியைச் சூழ்ந்திருக்கும் பயிரிடப்படாத நிலத்தின் பரப்பு 10 ஆயிரத்து 947 ஏக்கர் (இது தற்பொழுது மிக அதிகரித்துக் காணப்படுகிறது).

பயிரிடப்படும் நிலத்தின் பரப்பு 20 ஆயிரத்து 500 ஏக்கர் (இது தற்பொழுது குறைவடைந்துள்ளது).

ஏறக்குறைய 2 ஆயிரத்து 500 ஏக்கர் பிரதேசத்தில் உப்பு நீர் பரந்திருப்பதால் உப்பு எடுப்பதற்கும் குறைந்தர மீன்பிடித் தொழிலுக்குமே கடலேரிகள் பயன்தரக்கூடியதாக இருந்தன. சுமார் 11 ஆயிரம் ஏக்கர் பிரதேசம் காலத்திற்குக் காலம் உப்பு நீரால் ஆழ்த்தப்பட்டதனால் எவ்வித உபயோகமும் இன்றி இருந்தது. சுமார் [illegible] ஏக்கர் விளைநிலமாக இருந்த [illegible] விளைச்சல் குறைவாக [illegible]

[illegible] கடலேரிக்குள் புகுவதைத் தடுக்க அணைகள் கட்டப்பட்டால் உப்பு நீர் பரந்துள்ள பகுதி நன்னீர் ஏரியாகவும், உவர் நிலமான பகுதி விளைநிலமாகவும் மாறிவிடும் சாத்தியம் அதிகம் இருப்பதாக வெப் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தார்.




கடலேரியும், கடல்நீரும் | நிலப்பரப்பு

வடமராட்சிக் கடலேரியை நன்னீரேரியாக மாற்றுவதற்கு அணைகள் கட்டும் வேலைகள் 1947ஆம் ஆண்டு ஆரம்பமாகி 1953இல் முடிவடைந்தன. தொண்டமனாற்றில் கட்டப்பட்டுள்ள 613 அடி நீளமான அணைக்கட்டில் 413 அடி நீளமான பாகத்தில் 18 மதகுக் கதவுகள் பொருத்தப்பட்டன. இதனால் 15 ஆயிரம் ஏக்கர் நிலம் விளைநிலமாக்கப்பட்டது.

இத்திட்டங்கள் காலப்போக்கில் நிறைவேற்றப்படாமல் போயிற்று. 1995ஆம் ஆண்டிற்கு முற்பகுதியில் குடாநாட்டின் நீர்வளம், நிலவளம் தொடர்பாகப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் பயனுறுதி வாய்ந்த திட்டம் தயாரிக்கப்பட்ட போதிலும், அதனை நடைமுறைப்படுத்த முடியாதவாறு இடப்பெயர்வும் இராணுவ நடவடிக்கைகளும் ஏற்பட்டுப் பின்னடைவு நிலைக்குத் தள்ளியுள்ளன.

**நா.அகிலன்**
**வட்டுக்கோட்டை செய்தியாளர்**

தற்பொழுது யாழ்ப்பாணக் குடாநாட்டின் அபிவிருத்தி பற்றிய முன்னெடுப்புக்களில் இத்திட்டம் பற்றி கவனயீர்ப்பினைச் சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொண்டு, குடாநாட்டின் நீர்வளம், நிலவளம் என்பவற்றைப் பாதுகாத்து வளம் நிறைந்த பூமியாகக் குடாநாட்டை மாற்ற முன்வர வேண்டும். ◇

# கலப்புமுறை விவசாயச் செய்கையே எமது பிரதேசத்துக்குப் பொருந்தும்

## விவசாய விழாவில் வங்கி. முகாமையாளர் உரை

பண்டைய சுதேசிய தொழில்நுட்ப முறைகளையும், நவீன தொழிலநுட்ப முறைகளையும் இணைத்து கலப்பு முறையிலான விவசாயத்தை மேற்கொள்வதே இன்றைய காலகட்டத்தில எமது பிரதேசத்துக்குப் பொருத்தமான விவசாய முறையாக இருக்கும்.

அளவெட்டி மேற்கில் அண்மையில் நடைபெற்ற விவசாய விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

இரிடெக் நிறுவனமும், ஹற்றன் நஷனல் வங்கியும் இணைந்து அளவெட்டி மேற்கு மு.சேனாதிராஜாவின் வயலில் இவ்விழாவை நடத்தின.

அளவெட்டி மேற்கு விவசாய சம்மேளனத்தலைவர் நகமலநாதன் தலைமையில் தூவல் நீர்ப்பாசன அறிமுக விழாவாக இது நடைபெற்றது.

நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய வங்கி முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் மேலும் கூறியதாவது:-

விவசாயிகளுக்கு இது ஒரு முக்கியவிழா; ஒரு தொடக்கப்புள்ளி. அரச விவசாயப் பண்ணைகளில் பார்வையிடுவதற்கு மட்டும் என இருந்த நவீன தொழிலநுட்ப முறைகள் இன்று விவசாய நிலங்களில் பாவனைக்கென வந்துவிட்டன.

விவசாயத்தில் காலத்துக்குக் காலம் பல மாற்றங்கள் ஏற்பட்டுவந்துள்ளன. முக்கியமான மூன்று வகைகளில் எமது பிரதேசத்துக்குப் பொருத்தமான விவசாய முறையை நாம் தெரிவுசெய்ய வேண்டியுள்ளது.

ஒன்று, சூத்திரக்கிணறு, இயற்கைப் பசளை போன்ற பழைய விவசாயமுறைகளைக் கைக்கொள்வது இன்றைய வளர்ச்சி வேகத்துக்கு இது பொருத்தமுடையதா என்பது கேள்விக்குரியதாகும்.

இரண்டாவது, அதிநவீன தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றுவது, மேற்குலகம் கையாண்டு வரும் கண்ணாடி அறைகளில் வைத்துப் பயிர்களை வளர்க்கும் முறை. இது எமது சூழ்நிலைக்கு ஏற்றதல்ல.

மூன்றாவது, பண்டைய சுதேசிய தொழில்நுட்பங்களையும் நவீனதொழில் நுட்பங்களையும் கலந்து விவசாயத்துக்குப் பயன்படுத்துவது. இதுவே எமது பிரதேசத்துக்கு ஓரளவு பொருத்தமுடையது.

இது போன்ற முயற்சிகளுக்கு எமது வங்கிகள் உதவிகளும், ஒத்தாசைகளும் வழங்கும் - எனக் கூறினார்.

கீரிமலை கமநலசேவை நிலைய விவசாயப் போதனாசியர் திருமதி மணிகண்டன் நிகழ்வில் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போது கூறியதாவது:-

யாழ். மாவட்டத்தில் நிலத்தடி நீர் அசுத்தமடையவும், நச்சுத்தன்மையடையவும், உவர்த்தன்மையாகமாறவும் விவசாயிகள்தான் மூலகாரணமாகின்றனர்.

அசேதனப் பசளைகளை பயிர்களுக்கு இடுவதாலும் அளவுக்கதிகமான நீரைப் பாய்ச்சுவதாலும் கூடிய விளைச்சலைப் பெறலாம் என இவர்கள் கருதுகின்றனர். பயிர்கள் பசளையையும் நீரையும் கிரகிக்கக்கூடிய அளவிலேயே கிரகிக்கும். ஏனைய நீர், பசளை என்பன நிலத்தின் கீழ்மட்டத்தை அடைந்து நீருடன் கலக்கின்றன. இதனால், நிலத்தடி நீர் நச்சுத்தன்மையை அடைகிறது.

யாழ்ப்பாணத்தில் மண்கும்பான் பிரதேசத்தில் காணப்படும் நீர்தான் சுத்தமான குடிதண்ணீர் எனக்கொள்ள முடிகிறது. ஏனைய முழு இடங்களிலும் மலசலங்கள் கலந்த அசுத்த நீராகவும் நஞ்சு கலந்த நீராகவுமே குடிதண்ணீர் காணப்படுகின்றது என்று விவசாய ஆராய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

தூவல் நீர்ப்பாசனமுறை இக்குறைகளை நீக்கக்கூடியது. முற்றிலும், இரசாயனப் பசளைகள், கிருமிநாசினிகள் பாவிக்காமல் தூவல் நீர்ப்பாசன முறை மூலம் விவசாயியான சேனாதிராசா பயிர்ச்செய்கையில் அமோக விளைச்சலைப் பெற்று வெற்றிகண்டுள்ளார்.

தூவல் நீர்ப்பாசனம் மூலம் நீர்பாய்ச்சுவதால் மேல்நிலம் மட்டும் நனைந்து நீர் கீழே சென்றடைய வழி இல்லாமல் போகிறது. பசளையும் கீழே செல்ல மாட்டாது.

பனி கூடுதலாக இருக்கும்போது பயிர்களில் நுனிகருகல் ஏற்படும் காலையில் தூவல் நீர்ப்பாசனம் செய்வதால் பனிநீர் கரைந்து விடுகிறது. இதனால், பயிர் நோய்களில் இருந்து பாதுகாக்கப்படுகிறது. தூவல் நீர்ப்பாசனத்தை வெங்காயம், குரக்கன், மிளகாய் போன்ற பயிர்களுக்கும் உபயோகப்படுத்தி நல்ல விளைவைப் பெறலாம் - எனக் கூறினார்.

முன்னாள் விவசாயப் போதனாசியா வை.சுப்பிரமணியம் உரையாற்றுகையில், மேலை நாடுகளில் நஞ்சுகலந்த நீரைப்பருகுவதால் குழந்தைகள் நீல நிறமுடையனவாகப் பிறக்கின்றன. அந்தநிலை இங்கு ஏற்படாது இருக்க பயிர்களுக்கான இரசாயன மருந்துப் பாவனையைக் குறைக்க வேண்டும் என்றார்.

விவசாய சம்மேளன தலைவர்களான திருக்குமரன் (இணுவில் கிழக்கு), பத்திநாதன் (உடுவில் மேற்கு), க.முதலியார் (மானிப்பாய் மேற்கு), இரிடெக் நிறுவன முகாமையாளர் ஆகியோரும் நிகழ்வில் உரையாற்றினர். (ம-152)

# விவசாய வாய்க்கால், பாலங்கள் மானிப்பாய் மேற்கில் திறப்பு

வலிகாமம்தெற்கு,ஜன.27

மானிப்பாய்மேற்கு விவசாய சம்மேளனத்தினரால் புதிதாக உருவாக்கப்பட்ட புதிய வீதியொன்றும் இரண்டு விவசாய வாய்க்கால் பாலங்களும் கடந்த சனிக்கிழமை உத்தியோக பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டன.

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தலைவர் சி.பொ.வ.மா.க முதலியார் தலைமையில் நடந்த நிகழ்வில் கிளிநொச்சிப் பிராந்திய பிரதி நீர்ப்பாசனப்பணிப்பாளர் ஏ.சி.விநோதராசா, யாழ் மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் த.கணேசராசா, கீரிமலை பிரதேச விவசாய போதனாசிரியர் திருமதி ப.மணிவண்ணன் ஆகியோர் இவ்வீதியையும் பாலங்களையும் திறந்துவைத்தனர்.

மானிப்பாய் இடிகுண்டடியில் அமைக்கப்பட்ட புதிய வீதி, பாலங்கள் என்பனவே திறந்துவைக்கப்பட்டன.

சுமார் ஒரு கிலோ மீற்றருக்கும் கூடுதல் நீளமான இப்புதிய பாதை திறக்கப்பட்டமையால் விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் போக்குவரத்து இலகுவாக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட நீர்ப்பாசன திணைக்களத்தின் உதவியுடன் சுமார் 15 லட்சம் ரூபா செலவில் வீதியும், பாலங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

பெருந்தொகையான விவசாயிகள், பொதுமக்கள், நீர்ப்பாசனத் திணைக்கள அலுவலர்கள், உடுவில் கமநல சேவை நிலைய அலுவலர்கள் மற்றும் விவசாய சம்மேளனங்களின் உறுப்பினர்கள் எனப் பலர் இத் திறப்பு விழாவில் கலந்து கொண்டனர். (ம-152)

## ஆலயம் மூடப்பட்டது

குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள பழைமைவாய்ந்த புனித பேதுருவானவர் சிற்றாலயம் (சம்பேதுருவானவர் ஆலயம்) மூடப்பட்டுள்ளது.

இச்சிற்றாலயத்தின் முன் வாயிலை மூடி கிடுகுகள் கட்டப்பட்டுள்ளன. அதில் தொங்கவிடப்பட்டுள்ள பலகையில், 'ஆலயத்துக்குச் சொந்தமான வளவின் ஒருபகுதியில் தனியார் ஒருவரால் வீடியோக் கடை அனுமதியின்றித் திறக்கப்பட்டுள்ளது - இதனால் ஆலயம் மூடப்பட்டுள்ளது - குருநகர் இளைஞர்கள்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-51)

## விருப்பப்பாட மதிப்பீட்டுப்பணி

ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் விருப்பத்துக்குரிய பாடங்களின் விடைத்தாள மதிப்பீட்டுப் பணிகள எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் அடுத்த மாதம் 8ஆம் திகதி வரை நடைபெறும். யாழ்ப்பாணத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பெண்கள் பாடசாலையில் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறும்.

2003ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண் தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இரண்டு கட்டங்களாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

முதலாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டில் பிரதான பாடங்களின் மதிப்பீட்டுப் பணிகள் கடந்த 4ஆம் திகதி வரை பத்துத் தினங்கள் நடைபெற்றன.

## விளையாட்டு மைதான விஸ்தரிப்புக்கு காணி கொள்வனவு

சுழிபுரம்,ஜன.27

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானம் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதற்காகக் கல்லூரிக்கு கிழக்குப் பக்கமாகவுள்ள காணி கொள்வனவு செய்யப்படவுள்ளது. இக்காணிக் கொள்வனவுக்கான நிதியினை வெளிநாடுகளில் வாழும் பழைய மாணவர்கள் வழங்குவதற்கு முன்வந்துள்ளனர்.

இவ்வாரத்துக்குள் காணியைக் கொள்வனவு செய்து விளையாட்டு மைதானத்தை விஸ்தரிப்பதற்கான ஏற்பாடுகளை கல்லூரி பழைய மாணவர் சங்கம் மேற்கொண்டுள்ளது. (ம-8-28)

# மதிப்பீட்டுப் பணிக்கு விண்ணப்பங்கள் கோரல்

ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியை மேற்கொள்ள ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். கடந்த வருடம் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கு விண்ணப்பப்படிவங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஒ-11)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 08 - 05 - 1938

இறப்பு 26 - 12 - 2003

நாவாந்துறை

## செபஸ்தியாம்பிள்ளை மைக்கல்ராஜ்

(வடபிராந்திய போக்குவரத்துச் சபை முன்னாள் பரிசோதகர்)

இன்னொரு பாக்கியம் தான்
மீண்டும் இனி வாராதோ?
ஆலமரமாக நீ கொடுத்த நிழலினிலே
ஆறிவந்த குஞ்செல்லாம் - இனி
ஆலமரம் சரிந்ததினால் - இனி
ஆற இடமில்லை பப்பா
நாடகமும், நாட்டுக்கூத்தும்
கலைவாழ்வினில் காவிய நாயகனாய் நீ இருந்தாய்
தத்துவஞானி சோக்கிரட்டீஸ்"க்கு உயிர் கொடுத்த காவியனே
உன்பணி நாம் தொடர்ந்து உச்சம் அடையமுன்னே - உன்
உயிர் விட்டுப் போனதெங்கே - இனி
தொடரும் நினைவுகளெல்லாம்
உன் நாமத்தை போற்றி நிற்கும்.
*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

எமது குல விளக்கின் பிரிவால் துயருற்றிருந்தவேளை ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்

*- உன் பிரிவால் துயருறும் :*
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*நாவாந்துறை வடக்கு,*
*யாழ்ப்பாணம்.* (27597) (13-14-22)


# தையல், மனையியல் கண்காட்சி

வலி.கிழக்கு,ஜன.27

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைகளத்தின் அனுசரணையுடன் வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தையல் மனையியல் கண்காட்சி கோப்பாய், இருபாலை மக்கள் நலன் காக்கும் பிரிவுச் செயலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும்.

ஜி.ரி.ஞானசேகரவேல் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போலும் சிறப்பு விருந்தினர்களாக வலி. கிழக்கு உதவிப் பிரதேச செயலர்கள் திருமதி அ.சாந்தசீலன், க. இராசதுரை ஆகியோரும் கலந்து கொள்வர்.

(ஐ-180)

# குற்றச்செயல்களை கட்டுப்படுத்தப் பணிப்பு

வவுனியா,ஜன.27

வவுனியாப் பகுதியில் அதிகரித்துள்ள குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு வன்னிப் பிராந்திய பொலீஸ்மா அதிபருக்கும், வவுனியா பொலீஸ் சிரேஷ்ட அத்தியட்சகருக்கும் வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் கடிதம் மூலம் பணிப்புரை விடுத்துள்ளார்.

இப்பகுதியில் கொலைகள், கொள்ளைகள் உட்பட பல்வேறு குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாதது குறித்து வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் கவலை தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் கடந்த ஆறு மாத காலப் பகுதியில் 60 குற்றச்செயல்கள் இடம்பெற்றுள்ளதாகவும் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைக் கைதுசெய்ய இரவு நேர ரோந்துகளில் பொலீஸார் ஈடுபடவேண்டுமெனவும் நீதிபதி கேட்டுள்ளார். (ஐ-ரி)


## இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்.

## சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

*Manufactured By:*
**SITHARA PRODUCTS**
Puttalam Road,
Chillaw.
(Reg.No:-6382) AR/PR/Nô:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 222 - 2567
(சத்திரச் சந்திக்கு அண்மையில்)
(24-13-16)



# 16ஆவது வருட நினைவஞ்சலி



தோற்றம் 08 - 07 - 1955

மறைவு 24 - 01 - 1988

திருமதி

## காயத்திரி ஆனந்தரமணி தர்மசோதி

(விஞ்ஞான ஆசிரியை, மன்/காக்கயன்குளம் ம.வி.)

- காலஞ்சென்ற திரு.திருமதி சபா ஆனந்தரின் கனிஷ்ட புத்திரி -

திதி: 27.01.2004 ஷஷ்டி

(செவ்வாய்க்கிழமை)

ஆண்டுகள் பதினாறு ஆயிடினும் ஆறவில்லை எம்மனது!
ஈண்டு உம்மை நினைத்தே இப்பூவுலகில் வாழ்கின்றோம்.

*"ஸ்ரீ சாலினி",*
*கே.கே.எஸ். வீதி, இணுவில்.* (27531) (34-13-14-22) - குடும்பத்தினர்.



# 31ஆம் நாள் நினைவலைகளும்
# நன்றி நவிலலும் ஆத்மசாந்தி அழைப்பும்

திருமதி

## லோகநாயகி பாலசுப்பிரமணியம்



மலர்வு 11.12.1947

உதிர்வு 29.12.2003

அன்புக்கோர் அணிகலனாய் பண்புக்கோர் இருப்பிடமாய்
என்றுமே புன்சிரிப்புத் தவழும் இனிய முகத்தினளாய்
இன்ப வாழ்வுக்கு அடி கோலிய இல்லத்தரசியாய்த் திகழ்ந்து
இன்று எமைப்பிரிந்து முப்பத்தோராம் நாளும் வந்ததே தாயே!
ஆத்மசாந்திக்காக ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

கடந்த 29.12.2003 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த எனது அன்பு மனைவி இல்லத்தரசி திருமதி லோகநாயகி அவர்களுடைய இறுதி ஊர்வலம் 31.12.2003 புதன்கிழமை நடந்தது வரை எனதும் எனது மகனதும் துயரில் பங்கு கொண்ட இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள உறவினர்களுக்கும் எண்ணற்ற அன்பு நண்பர்களுக்கும் உற்ற நேரத்தில் உதவிய யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் குறிப்பாக 3ஆம் இலக்க விடுதியில் பணியாற்றுபவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் மலர் வளையங்கள் வைத்தும் அஞ்சலி செய்தோருக்கும் பத்திரிகைகள் வாயிலாக கண்ணீர் அஞ்சலிகள் பிரசுரித்தவர்களுக்கும் சகல விடயங்களையும் நாம் செவ்வனே நிறைவேற்ற எமக்கு அளப்பரிய உதவிகளைச் செய்த இலங்கை வங்கி வட பிராந்தியக் கிளைகளைச் சேர்ந்த பிரதம முகாமையாளர், மாவட்ட முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கும் தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்களுக்கும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சகோதர வங்கிகளின் உத்தியோகத்தர்களுக்கும் எனது மகனின் நண்பர்கள் யாவருக்கும், EWIS Ltd. நிறுவன உத்தியோகத்தர்களுக்கும் பருத்தித்துறை வர்த்தக சமுகத்தினருக்கும் யாழ். வர்த்தக சமுகத்தினருக்கும் சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு.குமாரவேல் அவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் செய்த சுன்னாகம் வர்த்தகர் திரு.சிவகடாட்சம் அவர்களுக்கும் மற்றும் நான் இங்கே குறிப்பிடத்தவறிய அன்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த உளம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். தனித்தனியே ஒவ்வொருவருக்கும் நன்றி தெரிவிக்க இயலாமைக்கு மன்னிப்புக் கோருகின்றோம்.

மறைந்த எமது குலவிளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (28.01.2004) புதன்கிழமை காலை 6 மணிக்கு பருத்தித்துறை தெணி அம்மன் ஆலய முன்றிலில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனை எமது இல்லத்தில் அன்று காலை 10 மணிக்கு நடைபெறும். மேற்படி ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட அழைப்பு நாம் அனுப்பத் தவறுதலாகத் தவறியிருப்பின் இந்த அழைப்பையே ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையாக வேண்டுகிறோம்.

க.பாலசுப்பிரமணியம் (கணவர்)
உதவிப் பொதுமுகாமையாளர் (வடபிராந்தியம்), இலங்கை வங்கி.
பா.முரளிதரன் (மகன்)
(EWIS Ltd.)

*சிவன் கோயிலடி,*
*பருத்தித்துறை.* (27547) (18-14-13-22)

# நாட்டின் எதிர்காலத்தைப் புறக்கணித்து தேர்தலைக் குறிவைக்கிறார் சந்திரிகா

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அண்மையில் இடம்பெற்ற 'சார்க்' அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் உச்சிமாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி சந்திரிகாவின் உரை எமக்கு ஒரேயடியான ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. ஆயினும், அதில் எந்தவிதப் புதுமையும் கிடையாது என்பது உண்மைதான். சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் சகல சந்தர்ப்பங்களிலும் அவர் இந்த நாட்டின் சமாதான முயற்சிகள் தொடர்பாக சமாதான ஆதரவு நிலைப்பாட்டையே வெளிப்படுத்தி வந்துள்ளார். சர்வதேச சமூகத்தின் முன்பாக உரையாற்ற வாய்ப்புக் கிடைத்த சகல சந்தர்ப்பங்களிலும் அவர் இந்நாட்டில மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு எதிராக எந்தவொரு கருத்தையும் வெளிப்படுத்தியதில்லை. அரசின் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் நோக்கத்துடன் ஸ்ரீ.ல.சு. கட்சியின் தலைவி என்ற வகையில் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா இந்நாட்டில் தெரிவித்துவரும் கருத்து நிலைப்பாட்டுக்கும், நாட்டின் தலைவி என்ற வகையில் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் வெளிநாடுகளில் வெளிப்படுத்தும் கருத்து நிலைப்பாட்டுக்கும் இடையே பாரிய வேறுபாடு காணப்படுவதைக் கடந்த இரு வருடங்களாக அவதானிக்க முடிகிறது.

## மாற்றம்

ஆனால், கடந்த இரு மாதகாலமாக, அதுவும் அவர் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை அரசிடமிருந்து தன் வசம் எடுத்துகொண்டதன் பின்னர், அவர் இந்நாட்டில் வெளியிட்டுவரும் கருத்துக்களில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பு ஐ.தே.கட்சியின் தலைமையிலான அரசின் வசம் இருந்த சமயங்களில் ஜனாதிபதி வெளியிட்டு வந்த சில கருத்துக்கள் நாடு மீண்டும யுத்தமொன்றுக்குத் தயாராகிவரும் உணர்வை ஏற்படுத்தின. ஆனால், தற்போது ஜனாதிபதி மீண்டும் யுத்தமொன்றில் ஈடுபடவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும் வகையிலான கருத்தெதனையும் தெரிவிப்பதில்லை. சார்க் தலைவர்களின் மாநாட்டில் உரையாற்றிய வேளையில் கூடக் கடந்த இரு ஆண்டுகளில் சமாதான நடவடிக்கைகள் காரணமாக நமது நாட்டுமக்களது வாழ்க்கையின் சுபீட்சத்துக்கான வேளை உருவாகியுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

கடந்த இரண்டு ஆண்டுகாலத்தில் சமாதான நடவடிக்கைகளில் குறிப்பிட்ட அளவு வெற்றி எட்டப்பட்டுள்ளதாகக் கருத முடியுமானால், சந்தேகமில்லாமல் அந்தப் பெருமை பிரதமா ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்கும் ஐ.தே.முன்னணி அரசையே சேரும். ஏனெனில், 1994ஆம் ஆண்டில் சந்திரிகாவால் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சிகள் கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் மீண்டும் பிரதமரால் முன்னெடுக்கப்படும் வரையான இடைப்பட்ட காலத்தில் நலிவடைந்து காணப்பட்டமையாலாகும் ஆனாலும், சமாதான அரசியல் முயற்சிகளில் முக்கிய அடிப்படை நோக்கத்தை அரசியல் பேச்சு நடவடிக்கையாக ஆக்குவதற்கு சந்திரிகாவும் பங்களிப்பு வழங்கியிருக்காவிட்டால், இந்தச் சமாதானப் பேச்சு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் பிரதமர் பல சிரமங்களுக்கு முகம் கொடுக்கவேண்டி நேர்ந்திருக்கும். அந்தவகையில் இந்தச் சமாதான முயற்சிகள் வெற்றியளிக்குமானால் அந்த வெற்றிக்குச் சொந்தம் கொண்டாடுவதற்கான உரிமை ஜனாதிபதிக்கும் உண்டு.

## தோல்விக்குப் பொறுப்பு யார்?

ஒருவேளை இந்தச் சமாதான முயற்சிகள் தோல்வியடையுமானால் அதற்கான, பொறுப்பை எவர்மீது சுமத்தலாம்? உண்மையில் அந்தத் தோல்விக்கான பொறுப்பை நாம் வெகு இலகுவாக விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் நாம் வெறுக்கும் அரசியல கட்சி ஆகிய தரப்புக்களின் தலையில் சுமத்தலாம். ஜனாதிபதி பாகிஸ்தான் தலைநகரிலிருந்து முழு உலகமும் மீண்டும ஒருதடவை அவதானமாகச் செவிமடுக்கும் வகையில் வெளியிட்ட கருத்தின பிரகாரம், சமாதான முயற்சிகள் முறிவடையாது முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டுமானால், இவ விடயத்தில இடம்பெற்ற தவறுகளைத திருத்திக்கொள்ளும் வகையில் செயற்பட வேணடியது அரசு மற்றும் ஜனாதிபதி ஆகிய இரு தரப்பினரதும் கடமையாகும் கடந்தகால் முழுவதும் இவ்வித வாய்ப்பான அன்னியோன்யமான செயற்பாடுகளை இந்த இரு தரப்பினர் மத்தியிலும் காண முடியவில்லை. அந்த வகையில் சமாதான நடவடிக்கைகளில் தற்போது ஏற்பட்டுள்ள குறைபாடுகள் மற்றும் நலிவு நிலைமை என்பவற்றுக்கான பொறுப்பை இந்த இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்டாக வேண்டும். விடுதலைப் புலிகள் அமைப்புக்குத் தாக்கம் ஏற்படுத்தும் வகையில் பலமான தரப்பொன்றாகச் செயற்பட விரும்பினால் வெற்றியைப் போன்றே தோல்வியையும் ஒற்றுமையாகப் பகிர்ந்து கொள்வதற்கு இரு தரப்பினரும் தயாராக இருத்தல் அவசியமாகும்.



## புலிகளுடன் உறவு

ஸ்ரீலங்கா அரசுடன் இணைந்து இந்தச் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லவும், விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புகளைப் பேணவும் - தனது விருப்பைச் சர்வதேச சமூகம் தற்போதும் வெளிப்படுத்தி வருகின்றது. எவர் எதனைக் கூறிய போதிலும் சர்வதேச சமூகத்தின் அனுசரணையின்றி எம்மால் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இயலாது. அவ்வாறே நமது நாடு தொடர்பாக சர்வதேச சமூகத்தின் மத்தியில் இந்தியாவையும், அமெரிக்காவையும் முக்கியத்துவமளித்துக்காட்டி அவ்விருதரப் பினர் மத்தியில் பிரிவினைகள் இருப்பதாகக் கூறிக்கொள்வது நம்மை நாமே ஏமாற்றும் செயலாகும்.

ஜனாதிபதியின் 'சார்க்' மாநாட்டுப பேச்சுக்கு அமைய, மீண்டும் ஜனாதிபதி பிரதமருடன் ஒன்றிணைந்து சமாதான நடவடிக்கைகளை முன்னிலைப் படுத்த வேண்டுமென நாம் எதிர்பார்க்க முடியுமா? பிரதமரைப் பொறுத்தவரையில், தனது எதிர்பார்ப்பைத் தமது மௌனத்தின் மூலம் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார். அதாவது, பாதுகாப்பு அமைச்சின் பொறுப்புக்களை தம்மிடமே வைத்துக்கொள்ள ஜனாதிபதி விரும்பினால், இந்தச் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான பொறுப்பையும் ஜனாதிபதியே ஏற்றுக்கொண்டாக வேண்டுமென்பது பிரதமர் தரப்பு வாதமாகும். அவ்விதம் அப்பணியை ஜனாதிபதி பொறுப்பேற்பாரானால் அதனைத் தான் எதிர்க்கப் போவதில்லை எனவும், அதற்கு ஆதரவுவழங்கத் தயாராகவுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். உண்மையில் பிரதமரின் அந்த வாக்குறுதியின் அடிப்படையில் ஜனாதிபதியால் தற்போது இந்தச் சமாதான முயற்சிகள் தொடர்பான நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல இயலும், ஜனாதிபதியின் நல்லிணக்க அரசியல் யோசனைக்குப் பிரதமர் உடன்படாவிட்டால், தனது 'சார்க்' மாநாட்டு உரையின் பிரகாரம் இன்றைய நிலையில் அவர் மேற்கொள்ளக்கூடிய சிறந்த நடவடிக்கை தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி இந்தச் சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதாகும்.

## கூட்டு ஒப்பந்தம்

ஆனால், இன்றைய அரசியல் சூழ்நிலை அவ்வளவு தூரம் தெளிவானதாகத் தோன்றவில்லை இந்தச் சமாதான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல் அவற்றைத் தீவிரமாக எதிர்த்து வந்ததோடு, தற்போதும் எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையிலான கருத்துக்களையே தெரிவித்து வரும் ஜே.வி.பியுடன் ஸ்ரீ.ல.சு.கட்சி கூட்டு ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டுள்ளது.

வடபகுதி ஊடகவியலாளர்களுடன் நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம் பெற்ற சந்திப்பொன்றில் பொ.ஐ.முன்னணியின் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம கருத்து வெளியிடுகையில், ஐ.தே.முன்னணி சமாதானப்பாதைக்கு விடுதலைப் புலிகள் அமைப்பைக் கொண்டுவந்தமை போன்று, ஜே.வி.பியினரைச் சமாதான வழிக்கு தமது பொ.ஐ.முன்னணி கொண்டுவரப் போவதாகத் தெரிவித்துள்ளார். 2000ஆம் ஆண்டில் ஜே.வி.பியினருடன் செய்துகொள்ளப்பட்ட தகுதிகாண் அரசுக்கான உடன் படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிபந்தனைகளில் ஜே.வி.பி. தரப்பால் முன வைக்கப்பட்டதொரு நிபந்தனை தொடரும் ஒரு வருடகாலத்துக்கு விடுதலைப் புலிகள் அமைப்புடன் பொ.ஐ.முன்னணி எவ்வித பேச்சுக்களிலும் ஈடுபடக் கூடாதென்பதாகும். அவ்விதம் ஒரு வருடகால நிர்ணயத்தை ஜே.வி.பி. விதித்தமைக்கான காரணம் எவ்விதத்திலும் அந்த ஒரு வருடகாலம் முடிவடைவதற்கு முன்னர் பொதுத்தேர்தல் ஒன்றைச் சந்திக்க நேருமென ஜே.வி.பி. உறுதியாக நம்பியதேயாகும். அவ்வாறான நோக்கத்திலேயே அப்போது ஜே.வி.பி. அந்த நிபந்தனையை விதித்தது.

ஆனால், தற்போது ஜே.வி.பியினர் இக்கூட்டுத்தொடர்பாக அவ்வாறான நிபந்தனை எதனையும் முன்வைக்கவில்லை.

## எதிர்ப்புப் பிரசாரம்

இதனிடையே, ஜனாதிபதியின் நம்பிக்கைக்குரிய அரசியல உதவியாளரான சந்தன கத்திரி ஆராய்ச்சி, ஜே.வி.பியுடன் பொ.ஐ.முன்னணி மேற்கொண்ட கூட்டு உடன்படிக்கைக்கு எதிராக வெளிப்படையாகவே பிரசார நடவடிக்கைகளில் இறங்கியிருந்தார். அதனைத் திட்டமிட்ட வகையில் பெரும் எடுப்பில் நடத்தினார். அவர் பத்திரிகைகள் வாயிலாக மட்டுமன்றி தொலைக்காட்சிப் பேட்டிகள் மூலமாகவும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார். அதுமட்டுமன்றி ஸ்ரீ.ல.சு. கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானோர் இக்கூட்டு முயற்சியை எதிர்த்தனர் என்றும் - அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ஜே.பி.யுடனான ஒப்பந்தத்தை மேற்கொண்டகையுடன் பொதுத்தேர்தலுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடுமென முன்னர் நம்பப்பட்டது. ஆனால், ஒன்றுமட்டும் நிச்சயமானதாகத் தோன்றுகின்றது. அதாவது இவ்விரு தரப்பினருக்குமிடையேயான கூட்டு ஒப்பந்தம், பொதுத் தேர்தலொன்று அண்மிப்பதாக உறுதிப்படுத்துகிறது.

## தயாராகும் ஐ.தே.கட்சி

ஐ.தே.கட்சி முன்னர் குறிப்பிட்டவாறு மௌனமாக அமைதிகாத்து வருகின்றபோதிலும் அது பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளத் தன்னைத் தயார்ப்படுத்திவருகிறது. இந்த சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை அது ஜனாதிபதியின் தலையில் சுமத்தியுள்ளது. இதன்மூலம் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு முகம்கொடுக்க நேரிடும் தருணத்தில் இந்தச் சமாதான முயற்சிகளுக்கான பொறுப்பு தம்மீது சுமத்தப்படாத விதத்தில் நடந்து கொள்வதில் கவனம் செலுத்தி வருகின்றது: ஸ்ரீல.சு.கட்சியுடன் இணைந்து நல்லிணக்க அரசொன்றை உருவாக்கினாலகூட, நீண்டகால இடைவெளியில் தம்மிலும் பார்க்க தமது எதிர்த்தரப்பினர் பலமடைவதற்கு தாம் வழிசமைத்துக் கொடுப்பதாக அமைந்து விடுமென வேறொரு கோணத்திலும் ஐ.தே. கட்சி சிந்திக்கின்றது. நல்லிணக்க அரசு அமைப்பது பற்றிய யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கங்கள் 1970ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட கூட்டரசின் நிர்வாகத்தில் தோல்வியளித்த பொருளாதார அபிவிருத்தி முயற்சிகளின் புதிய பிரதிக்குச் சமமானதாகையால் இரண்டு அல்லது மூன்றாண்டு கால இடைவெளிகளுள் தமக்கு மீண்டும் வாய்ப்பு உருவாகுமெனப் பிரதமர் நம்புவதாகத் தோன்றுகின்றது. இனப்பிரச்சினை விடயம் தொடர்பாக இவ்வாறானதொரு நல்லிணக்க அரசில் சிக்கல்கள் தோன்றுவதற்கான வாய்ப்புக்கள் உருவாக நிறையவே இடமுண்டு.

இவையாவற்றையும் அலசி ஆராயுமிடத்து, ஜனாதிபதியின் 'சார்க்' மாநாட்டு உரை ஸ்ரீல.சு.கட்சியின் மாவட்டத் தலைவர்களுக்குத் தாம்

**வீயெஸ்ரி**

என்ன செய்யவேண்டுமென முடிவெடுப்பதில் சிரமத்தை உருவாக்கியுள்ளது. ஏனெனில், ஸ்ரீல.சு.கட்சி இனப்பிரச்சினையை பாரிய சிக்கலான விடயமெனக் காட்டிக்கொள்வதற்கு உற்சாகம் காட்டி வந்தது. அதுமட்டுமன்றி, ஸ்ரீல.சு.கட்சியின் தலைமைத்துவம் பகிரங்கமாகவே ஒருவருக்கொருவர் எதிரான அரசியல் கருத்துக்களையே வெளியிட்டு வருகின்றது. ஜனாதிபதியே கௌரவமளிக்கும் வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு எதிராக ஜனாதிபதியின் தலைமையிலான ஸ்ரீல.சு.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

ஜனாதிபதியின் 'சார்க்' மாநாட்டு உரைக்கும் சிறிதளவேனும் மதிப்பளிக்காத விதத்தில் ஸ்ரீல.சு.கட்சியினுள் இடம்பெற்றுவரும் இந்தச் சிக்கல்கள் தொடர்ந்து இடம்பெறும் என்பது மட்டுமன்றி, அச்சிக்கல்கள் காரணமாகவேனும் பொதுத் தேர்தலொன்றை நோக்கிச் சந்திரிகா பயணிக்க வேண்டிய நிலை உருவாகவும் இடமுண்டு. இடம்பெற்றுவரும் நிகழ்வுகளை நோக்கினால், சந்திரிகா நாட்டின் எதிர்காலம குறித்து சிறிதளவாவது அக்கறை கொள்ளாது, தேர்தல் வெற்றியை கருத்திற்கொண்டே தனது சகல கொள்கைகளையும் வகுத்து வருவதாகத் தோன்றுகின்றது. ☆

# பதவிக்காகக் கற்றுப் பயனில்லை; ஒழுக்கத்தைப் பழகவேண்டும்

## ராஜயோகினி மீரா அறிவுறுத்து

பட்டங்களுக்காகவும், பதவிக்காகவும் கல்விகற்பதில் பயனில்லை, வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி ஒழுக்க சீலர்களாக நாம் வாழ்வதற்கே கல்வி கற்க வேண்டும்.

ராஜயோகினி பி.கே.மீரா குமாரி இவ்வாறு அறிவுறுத்தினார்.

பிரம்மகுமாரிகளின் ராஜயோகா நிலையத்தின் ஏற்பாட்டில் தென்கிழக்காசியப் பிராந்தியத்துக்கான பிரம்மகுமாரிகள் இயக்குநர் பி.கே.மீரா கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் ஆன்மீக விழிப்புணர்வு உரை நிகழ்த்தினார். அந்த உரையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று உலகத்திலே பெரும்பாலானவர்கள் ஒழுக்கமற்றவர்களாகவும், துர்நடத்தை உள்ளவர்களாகவும் உள்ளனர். இதனால்தான் உலகம் சமாதானத்தை இழந்து சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறது. வாழ்க்கையில் செல்வத்தைத் தொலைத்தால் எப்படியாவது அதனைச்சீர் செய்துகொள்ள முடியும். ஆனால், நல்நடத்தையில் இருந்து நழுவிவிட்டால் அதனைச் சீர் செய்வது மிகக்கடினமாகும்.

பாடசாலையில் கல்வி கற்பதற்கு பதவிகளையும் பட்டங்களையும் பெற்றுக்கொள்வதே நோக்கமாக இருக்கக் கூடாது அப்படி நினைப்பது தவறாகும். படிக்கின்ற காலத்தில்தான் நல்ல ஒழுககங்களையும், நல்ல எண்ணங்களையும் எம்முள்ளே நாம் விதைத்துக் கொள்ளமுடியும்.

எங்களைப்பற்றி, எங்களுடைய நடத்தைபற்றி நாமே சுயவிமர்சனம் செய்து கொள்ள வேண்டும். எம்முடைய நடத்தைபற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டுமென்றால் எமக்குள்ளே நான்கு கேள்விகள் எழவேண்டும்.

நான் யார்?, நான் யாருடைய குழந்தை?, நான் ஏன் உலகத்தில் பிறந்தேன்?, நான் எங்கு செல்லவுள்ளேன்?

இத்தகைய கேள்விகளை எழுப்பி எம்முடைய நடத்தைகளை நாம் சீர் செய்துகொள்ளவேண்டும் "நீங்கள் யார்?" என்ற கேள்வியை யாராவது கேட்டால உடனே உங்களுடைய சுய விவரக்கோவையினைச் சொல்ல ஆரம்பித்துவிடுவீர்கள். அது விடையாக இருக்கமுடியாது. இதற்குச்சரியான விடை எதுவென்றுபார்த்தால் "இந்த சரீரத்தின் சாரதியான ஆத்மா" என்பது தான் சரியான விடை. ஏனெனில், நாங்கள் 2 விடயங்களுக்குள் உட்பட்டு இருக்கிறோம். ஒன்று - சரீரம், மற்றொன்று ஆன்மா. இதில் நாம் சரீரம் என்று மட்டுமே நினைத்துச் செயற்படும்போதுதான் எம்முடைய நடத்தைகளில் தீயவை புகுந்துவிடுகின்றன. ஆகவே, நாம் எமமுள்ளே ஓர் ஆன்மா இருக்கிறது என்று உணர்ந்து கொள்ள வேண்டும். நாம் பரமாத்மாவின் குழந்தைகள். ஆகவே, நாம் கடவுளின் குழந்தைகள். எவருக்கும் தீமை விளைவிக்கக்கூடாது, நல்லதைச் செய்யவேண்டும்; நல்லதை நினைத்தல வேண்டும்; நாம் மனிதர்களாக வாழப பழகிக்கொள்ள வேண்டும் - என்றார் அவர்.

(ஒ-ரி)

## வழக்கு மாற்றம்

ஆலய விக்கிரகங்களைக் கடத்திச் செல்லும்போது ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடியில் வைத்துக் கைது செய்யப்பட்டவர்களின் வழக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் வடக்கு அரசடி விநாயகர் ஆலயத்தில் திருடப்பட்ட விக்கிரகங்களைக் கடத்திச்செல்லும் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் வவுனியா மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் குறிப்பிட்ட குற்றம் இடம்பெற்றமையால் வழக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது.(ம-86)

## சமாதானத்தை அடிப்படையாகக் கொண்ட சுலோக அட்டைப் போட்டி

இளவாலை,ஜன.27

சமாதானத்தை அடிப்படையாகக் கொண்ட சுலோக அட்டைப் போட்டியொன்று சர்வமத சமாதான அமைப்பினால் நாடு முழுவதும் நடத்தப்படவுள்ளது.

மூன்றுமொழிகளிலும் நடைபெறவுள்ள இப்போட்டியில் 13வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றமுடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்று மொழிகளிலும் தனித்தனியே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுவோருக்கு முறையே 5ஆயிரம் ரூபா, 3ஆயிரம்ரூபா, 2ஆயிரம் ரூபா பரிசுத்தொகை வழங்கப்படவுள்ளது.

போட்டிக்கு ஒருவர் எத்தனை சுலோகங்களையும் அனுப்பமுடியும். அவற்றில் போட்டியாளரின் முழுப் பெயர், பாடசாலை முகவரி ஆகியவை குறிப்பிட்டிருக்க வேண்டும். பாடசாலை அதிபர் அதனை உறுதிப்படுத்தி பெப்ரவரி மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிகளில் ஏதேனும்ஒன்றுக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

★ வண.மாதம்பாகம அஸ்ஸஜி நாயக்கதேரர் இணைத்தலைவர், சர்வ மத சமாதான அமைப்பு, ஸ்ரீஇஸிபத்தானராமய, 180/34, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு - 14.

★ வண.பிதா ஜவன்பெரேரா, கத்தோலிக்க கல்விக்கான தேசியப் பணிப்பாளர், ஆயர் இல்லம், கொழும்பு-8

★ தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில்கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர்கிங்ஸ்றோட், 159, கொழும்பு - 8.

★ சிவஸ்ரீ ப. சிவலோகநாத தேசிகர், இணைப்பாளர், சர்வமத சமாதான அமைப்பு, ஸ்ரீஇராமலிங்கேஸ்வர ஆச்சிரமம், அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.

(ம-8-48)

## கதிரமலை சிவன் ஆலயத்தில் விசேடமாக கோமாதா பூசை

வலிகாமம் தெற்கு,ஜன.27

இந்துசமய விவகார அலுவல்கள அமைச்சினால் சுன்னாகம் ஸ்ரீகதிரமலை சிவன் தேவஸ்தானத்தில் நடத்தப்பட்ட பொங்கல்விழாவையொட்டிய சிறப்பு வழிபாட்டின்போது 'கோமாதா பூசை' விசேடமாக நடைபெற்றது.

பசுக்களுக்கான விசேடபூசைகளும விசேட பொங்கல்களும் நடைபெற்றன. சர்வதேச இந்துமத குருபீடத்தின் ஆஸ்திரேலிய பிரதிநிதி டாக்டர் சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தகுருக்கள் ஆசியுரை வழங்கினார்.

சைவசமயமக்கள் விரதம், பண்ணிசை, பரதம், கர்நாடக இசை போன்ற பாரம்பரிய சமயம் தொடர்பான செயற்பாடுகளைக் கடைப்பிடிககாவிடின் அவை ஏனையவர்களால் கைக்கொளளப்பட்டுவிடும். தைப்பொங்கல், வருடப் பிறப்பு, தீபாவளி, நவராத்திரி போன்ற பெரு நாள்களை உரிய முறையில் கொண்டாட வேண்டும்.

சைவமும் தமிழும் நீண்டகாலம் நிலைக்க வேண்டுமானால் வேத மந்திரங்களும் திருமுறைகளும் தொடர்ந்து ஒலிக்க வேண்டும். இங்கிருந்து எழுகின்ற திருமுறை ஒலி இந்த நாடு பூராகவும் பரந்து ஒலிக்க வேண்டும்.

- இவ்வாறு இவ்விழாவில் கலந்து கொண்ட சிவத்தமிழ்வித்தகர் சிவ. மகாலிங்கம் எடுத்துக் கூறினார்.

தைப்பொங்கல் போன்ற விழாக்கள் மக்களிடையே ஒற்றுமையையும் சமூக உணர்வுகளையும் ஏற்படுத்துகின்றன. மனத்துன்பப்பட்டவர்களுக்கு மனதில் மகிழ்ச்சியையும் சாந்தியையும் தருகின்றன. நாம் எல்லோரும் விழிப்பாக இருந்து எமது சமயப் பணிகளை முன்னெடுததால் எமது முயற்சிகளுக்கு எவரும் தடைபோட முடியாது என அருளுரை வழங்கிய திருமதி தி.மங்கையர்க்கரசி கூறினார்.

பொங்கல் பூசைகளைத் தொடர்ந்து, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் தமிழர் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

(ம-152)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கல்வி அமைச்சின் மனிதவள பண்பாட்டு அலுவல்கள் அமைச்சுப் பிரிவினரால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட சமூகக்கல்வி எழுத்துப்பரீட்சைப் போட்டியில் 8 –9 ஆம் தர பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்ற

**செல்வன் உதயசூரியன் அனுராஜ்**

அவர்களை அகமகிழ்ப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

கோட்டக்கல்வி அதிகாரி, அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
கிளி/பூநகரி நல்லூர் ம.வி.

(27655)(14-19-21)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த
அமரர்

**பூரணலிங்கம் விக்னேஸ்வரன்**



அன்னையின் மடியில்
22-06-1944

ஆண்டவன் அடியில்
08-02-2003

திதி: 28-01-2004

பாசத்தின் உறைவிடமே பண்பின் குலவிளக்கே!
அறிவுரைகள் பல கூறி எம்மை அன்பால்
அரவணைத்த அணையாத தீபமே!
இல்லத்தின் உறவுகளைப் பிரிந்திட்ட
ஆண்டொன்றில் ஆறுமோ உங்கள்
நினைவு அப்பா?

85/7, ஆனந்தன்வடலி வீதி.
அரியாலை.

அன்பின்:
- குடும்பத்தினர்.

(27395)(34-16-9-21)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் தோற்றம்
23 - 03 - 1979

கடலில் சங்கமம்
07 - 02 - 2003

**கிருஷ்ணசாமி சதீஸ்வரன்**

**ஆற்றலோன் - சுதன்**

மண்ணை மீட்டெடுக்க உன்னையே அர்ப்பணித்த
கண்ணின் மணி போன்ற ஆற்றலோனே! சுதனே!
வீரச்சாவடைந்த உன்னை இன்று நாம் நினைந்து
உருகி உள்ளம் நெக்குருகித் தவித்துத் துடிக்கின்றோம்.

வீரபத்திரர் கோயிலடி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

- குடும்பத்தினர்.

(சி-32929) (26-16-10-21))

## கிழக்கிலங்கைக் குழு குடாநாட்டு நிலையைக் கண்டறிந்தது

யாழ்ப்பாணம்,ஜன.27

வவுனியாவில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் 'விழுது' ஆற்றல மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் வாழைச்சேனை அல் - இன்சானியா சமூக ஐக்கியமன்றம் மற்றும் புல்மோட்டை சமூக அபிவிருத்தி மன்றம் ஆகிய அமைப்புகளின் உறுப்பினர்கள வடபகுதிக்கு வந்தனர். தமிழ்-முஸ்லிம் சமூகங்களிடையே ஐக்கியத்தை வளர்க்கும் நோக்கில் இவர்களது இந்தப் பயணம் அமைந்திருந்தது.

'விழுது' அமைப்பின் தவிசாளர் சாந்தி சச்சிதானந்தம் இந்தப் பயணத்துக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். கிழக்கிலங்கையிலிருந்து வந்த இவர்கள், குடாநாட்டின் இன்றைய சூழ்நிலை, அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் போன்ற விடயங்கள் குறித்து நேரில் கண்டறிந்தனர்.

ஐந்து நாள்கள் இங்கு தங்கியிருந்த இவர்கள் நேற்றுக் கிழக்கிலங்கைக்குத் திரும்பினர். (ஒ)

## சகல வளங்களுடன் பாடசாலைகளை உருவாக்கத் திட்டம்

தென்மராட்சி,ஜன.27

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சகல வளங்களும் கொண்ட பாடசாலைகள் மாகாணக்கல்வி அமைச்சினால் உருவாக்கப்படவுள்ளன. இத்திட்டத்திற்கென ஒவ்வொரு கல்வி வலயத்திலும் தலா மூன்று பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதன்பிரகாரம் தென்மராட்சி கல்வி வலயத்தில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம், மட்டுவில் சந்திரபுரம் ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம் ஆகியவை தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இப்பாடசாலைகள் பௌதீகவளம், நூலக வசதி, ஆய்வு கூடம், விளையாட்டு மைதானம், ஆசிரியர்வாண்மை விருத்தி, கல்வி விருத்தி ஆகிய வளங்களைக் கொண்டதாக உருவாககப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-8-117)

## கும்பாபிஷேகம்

காரைநகர்.ஜன.27

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் அடுத்தமாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள கடந்த 24ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடக்கின்றன. பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும்.

எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.44 மணி தொடக்கம் 9.04 மணி வரை உள்ள சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

இவ்வாலயத்தின் நான்கு பக்கங்களும் புதிதாக இராஜகோபுரங்கள், மற்றும் மண்டபங்கள் அமைக்கப்பட்டுப் பாரிய அளவில் திருப்பணிகள் இடம்பெற்று வருகின்றன. (ம-73)


## பைபிள் விற்பனைக்கு

றோமன் கத்தோலிக்கப் பெருமக்களே! உங்களுக்கு ஒரு நற்செய்தி! பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் சேர்ந்த பைபிள் விற்பனைக்கு உண்டு. 275/= புதிய ஏற்பாடு மட்டும் 85/= சொற்ப பிரதிகள் மட்டுமே கைவசமுள்ளன. உடனே பெற்றுக் கொள்ளுங்கள். பிரதிகளுக்கு முந்துங்கள்!

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 5542

(26-21-19-16) (சி-32876)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தாளையடி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், ஓய்வுபெற்ற கிராம அலுவலரும், வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத்தின் தாளையடி கிளைக்குழு தலைவருமான

**மரியாம்பிள்ளை யோசேப்**

அவர்கள் 05.12.2003 அன்று யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப் பிரமாணஞ் செய்துகொண்டதையிட்டு அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். - கிராம அபிவிருத்திச் சங்கம், தாளையடி.

(27652)(34-21-19-16)

## நற்கருணைநாதரின் அருள் கிடைக்கப் பெற்றோம்

1995ஆம் ஆண்டு மருத்துவபீட மாணவர் ஒருவர் நமது நாட்டின் இடப்பெயர்வு காரணமாக அவரது இறுதி ஆண்டுப்படிப்பு தடைப்பட்டது. அந்தவேளை நற்கருணைநாதரின் அருள் இரக்கத்தால் நாடு சமாதான நிலைக்கு வந்ததும் 2002ஆம் ஆண்டு முதலாக இறுதி ஆண்டுப் பரீட்சைக்காகக் கல்வி கற்று நற்கருணைநாதரை பரிபூரணமான நம்பிக்கையோடு ஜெபஞ்செய்து வணங்கிக்கொண்டு பரீட்சை எழுதினார். அவரின் அருளால் சித்தியடைந்தார்.

இந்த நற்செய்தியை சந்தோஷத்துடன் தெரிவித்து நற்கருணைநாதரைப் புகழ்ந்து மகிழ்ச்சியுடன் வாழ்த்துக் கூறுகின்றோம்.

*'புதுமை நிறைந்த நம் நாதர் என்றும் காப்பார்'*

யாழ்ப்பாணம்.

- பெற்றோர், அன்பு மனைவி, அன்ரி, சுற்றத்தார்.

(27658)(26-14-19-21)

## மரண அறிவித்தல்

**செல்வி சிங்கராசா சசிரேகா**

பலாலி மேற்கைப் பிறப்பிடமாகவும் சந்நிதி றோட், அச்சுவேலியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சிங்கராசா சசிரேகா 25.01.2004 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சிங்கராசா - யோகேஸ்வரியின் அன்பு மகளும் சிவரூபன் (லண்டன்), செல்வரூபன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிருஷ்ணபிள்ளை - சிவக்கொழுந்து, பொன்னையா - காலஞ்சென்ற செல்லமுத்து ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அச்சுவேலி தீர்த்தாங்குளம் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்நிதி றோட்,
அச்சுவேலி.

தகவல்:
சிங்கராஜா குடும்பத்தினர்.

(27657)(34-14-19-21)

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# பேரழிவு ஆயுதங்கள் ஈராக்கில் இல்லை!

## அமெரிக்கா திடீர் 'பல்டி'

மொஸ்கோ,ஜன.27

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இல்லை என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் திடீர் 'பல்டி' அடித்திருக்கிறார். ஆனால், இது குறித்து விடை தெரியாத சில கேள்விகள் இன்னமும் உள்ளன என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ஜோர்ஜியா, ரஷ்யா, ஆகிய நாடுகளுக்குச் சென்ற கொலின் பவல் அந்த நாடுகளின் தலைவர்களுடன் ஈராக் போர் குறித்து விரிவாக ஆராய்ந்தார் என்று கூறப்படுகிறது.

ஜோர்ஜிய சுற்றுப்பயணத்தை முடித்து நேற்று ரஷ்யாவுக்கு வந்த இவர், அங்கு நிருபர்கள் மத்தியில் கூறியதாவது:-

சதாம் பேரழிவு ஆயுதங்கள் வைத்திருந்தார் என்பது உண்மைதான். ஆனால், தற்போது ஈராக்கில் அந்த ஆயுதங்கள் இல்லை என்றே கருத வேண்டியுள்ளது. ஈராக்கின் அனைத்து இடங்களிலும் சோதனை செய்வதென்பது முடியாத காரியம். ஆனாலும் தொடர்ந்து சோதனைகள் நடைபெறுகின்றன.

ஈராக் தன்னிடமிருந்த பேரழிவு ஆயுதங்களை சிரியாவுக்கு விற்றுவிட்டதாகவும் தெரியவருகிறது. - என்று கூறினார்.

அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும், பிரிட்டன் பிரதமர் ரொனி பிளயரும் ஈராக்கில் இன்னமும் கண்டுபிடிக்கப்படாமல் பேரழிவு ஆயுதங்கள் உள்ளன என்று கூறிவருவதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே -

ஈராக்கில் ஆயுதப் பரிசோதனை நடத்திய குழுவுக்கு தலைமை தாங்கி திடீரென பதவி விலகிய டேவிட் கே இது குறித்துக் கூறுகையில் -

ஈராக் மீது அமெரிக்கா தாக்குதலைத் தொடுப்பதற்கு முன்பு இது தொடர்பான ஆவணங்கள், பேரழிவு ஆயுதங்கள் தயாரிப்பதற்குத் தேவையான பொருள்கள் சிரியாவுக்குக் கடத்தப்பட்டு அங்கு ஒளித்து வைக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் உள்ளன. என்று அமெரிக்கா கூறுகிறது.

ஆனால், ஈராக்கின் ஆயுதங்கள் அங்கு மறைத்துவைக்கப்பட்டுள்ளதாக இதுவரை அறியப்படவில்லை. ஈராக் இராணுவ முன்னாள் அதிகாரிகளிடம் நடத்திய விசாரணையின் மூலம் சதாம் ஹுசைனின் முக்கிய நோக்கமான பேரழிவு ஆயுதங்கள் தயாரிக்கத் தேவையான சில இரசாயனப் பொருள்கள் சிரியாவுக்குக் கடத்தப்பட்டுள்ளன எனத் தெரியவந்துள்ளது.

சிரியாவுக்குக் கடத்தப்பட்ட ஆயுதத் தயாரிப்புப் பொருள்கள் எவை மற்றும் என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடிக்கவேண்டும். ஆனால், பேரழிவு ஆயுதங்கள் எதுவும் சிரியாவில் ஒளித்துவைக்கப்படவில்லை.

## ஈராக்கின் பேரழிவு ஆயுதங்கள் சிரியாவில் மறைக்கப்பட்டுள்ளன

### பதவி விலகிய அமெரிக்க அதிகாரி கூறுகிறார்

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் பேரழிவு ஆயுதங்கள் உட்பட ரகசிய ஆயுதங்கள் தயாரிப்பதற்கான பொருள்கள் சிரியாவில் ஒளித்துவைக்கப்பட்டுள்ளன என்று அமெரிக்கா கூறுகிறது.

இதுகுறித்து அமெரிக்காவின் ஆயுதச்சோதனைக் குழுத் தலைவர் பதவியிலிருந்து விலகும் டேவிட் கே 'சண்டே டெலிகிராப்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

ஈராக் மீது அமெரிக்கா தாக்குதலைத் தொடுப்பதற்கு முன்பு இது தொடர்பான ஆவணங்கள், பேரழிவு ஆயுதங்கள் தயாரிப்பதற்குத் தேவையான பொருள்கள் சிரியாவுக்குக் கடத்தப்பட்டு அங்கு ஒளித்து வைக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

பெரிய அளவில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக நாங்கள் கூறவில்லை. ஈராக் இராணுவ முன்னாள் அதிகாரிகளிடம் நடத்திய விசாரணையின் மூலம் சதாம் ஹுசைனின் முக்கிய நோக்கமான பேரழிவு ஆயுதங்கள் தயாரிக்கத் தேவையான சில இரசாயனப் பொருள்கள் சிரியாவுக்குக் கடத்தப்பட்டுள்ளன எனத் தெரியவந்துள்ளது.

சிரியாவுக்குக் கடத்தப்பட்ட ஆயுதத் தயாரிப்புப் பொருள்கள் எவை அவற்றுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்.

ஆனால், பேரழிவு ஆயுதங்கள் எதுவும் சிரியாவில் ஒளித்து வைக்கப்படவில்லை என்று அந்நாடு கூறுகிறது. எனினும், ஈராக் எல்லையில் இருந்து சிரியாவுக்கு ஊடுருவலைத் தடுக்க முடியவில்லை எனவும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதற்கிடையில் -

பலஸ்தீனத்தின் ஹமாஸ் மற்றும் ஜிகாத் பயங்கரவாதக் குழுக்களுக்கு சிரியா ஆதரவளித்து வருவதாகவும், சிரியாவில் உயிரியல் மற்றும் வேதியியல் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த வாரத்தில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் கூறியிருந்தார்.

## சுட்டுவீழ்த்தப்பட்ட ஹெலியின் விமானிகளைக் காணவில்லை!

### ஈராக்கை சல்லடை போடுகிறது அமெ. படை

பக்தாத்,ஜன.27

ஈராக்கில் கடந்த வெள்ளிக்கிழமை சுடடுவீழ்த்தப்பட்ட அமெரிக்க ஹெலியில் இருந்த இரண்டு விமானிகளையும் மற்றொரு படைவீரரையும் காணவில்லை. அவர்களை, சதாம் ஹுசைனின் ஆதரவுப் போராளிகள் கடத்தியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இதனால், ஈராக்கின் சந்துபொந்துகளில் அமெரிக்க உளவுப்படையுடன் இணைந்து தரைப் படையினர் தீவிர தேடுதல்களை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை தலைநகர் பக்தாத்தில் இருந்து தென்பகுதியில் உள்ள மொசூல் நகரில் ரைக்கிறிஸ் நதிக்கு அருகில் - இந்த ஹெலி சுட்டுவீழ்த்தப்பட்டது.

இதிலிருந்தவர்கள் உயிரிழந்துவிட்டனர் என்றே முதலில் செய்திகள் வெளியாகின. ஆனால், அதனை அமெரிக்கப் படை மறுத்தது. ஹெலி வீழ்ந்த பகுதியில் இரண்டு நாள்களாக தொடர்ச்சியான தேடுதல் நடந்தது. தேடுதலில் ஹெலியில் இருந்தவர்களின் சடலங்கள் கிடைக்கவில்லை. எனவே, அவர்கள் உயிரிழக்கவில்லை என்று படையினர் கூறுகின்றனர்.

சம்பவம் நடந்து இரண்டு நாள்கள் கழித்தே விமானிகளைக் காணவில்லை என்ற செய்தியை அமெரிக்கா உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கிறது.

ஹெலியை சுட்டுவீழ்த்திய போராளிகளே அவர்களைக் கடத்திச் சென்றிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இதனால், ஹெலி வீழ்ந்த பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களில் அமெரிக்கப் படையினர் தீவிர தேடுதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

ரைக்கிறிஸ் நதியிலும் தேடுதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அதிவேக இயந்திரப் படகுகள் மூலம் படையினர் நதியில் தேடுதல் நடத்தி வருகின்றனர்.

ஹெலி சுட்டுவீழ்த்தப்பட்ட போது விமானிகள் உயிரிழந்திருக்கலாம் என்றும் அவர்களின் சடலங்கள் நதியில் அடிபட்டுச் சென்றிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. ஆனால், இரண்டு நாள்களாக நடந்த தேடுதலில் விமானிகள் கண்டுபிடிக்கப்படாததால் அவர்கள் கடத்தப்பட்டுள்ளனர் என்று முடிவுக்கு அமெரிக்கா வந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ஈராக் போர் முடிந்துவிட்டதாக அமெரிக்க ஜனாதிபதி புஷ் உத்தியோகபூர்வமாக அறிவித்தபின், அங்கு அமெரிக்கர்கள் கடத்தப்பட்டிருப்பது இதவே முதல் தடவையாகும்.

விமானிகள் இருவரும் கடத்தப்பட்டிருப்பது அமெரிக்கப் படையினர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த மாதத்தில் மட்டும் அமெரிக்கப் படை ஈராக்கில் 5 ஹெலிகளை இழந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(ம)

## சோனியாவைப் பிரதமராக்க கருணாநிதி பச்சைக்கொடி




சென்னை,ஜன.27

நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டினால் சோனியா காந்தியைப் பிரதமராக ஏற்க கருணாநிதி பச்சைக்கொடி காட்டியிருக்கிறார்.

நாடாளுமன்றத் தேர்தல் குறித்து நிருபர்களுக்கு அவர் மேலும் கூறுகையில்:-

தமிழ்மொழியை செம்மொழியாக ஆக்கவேண்டுமென்பதையும், மத்தியில் ஆட்சி மொழிகளில் ஒன்றாக தமிழும் அமையவேண்டும் என்பதையும் வலியுறுத்தத் தவறமாட்டேன். பொதுவாக நாடு முழுவதும் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. இதற்கு ஒரு வழிகாண வலியுறுத்துவேன்.

சுமார் 5 ஆண்டுகளாக நாடாளுமன்றத்திலும் வெளியிலும் வாயளவில பேசப்படும் மகளிர் இடஒதுக்கீடு - தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியில் ஊராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவற்றில் நடைமுறைப்படுததப்பட்டது போல் சட்டமன்றம், நாடாளுமன்றத்தில் இந்த மகளிர் இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த வழி காணவேண்டும் என்பதை வலியுறுத்தவுள்ளேன்.

ஜனநாயக ஆட்சி நெறிமுறைகளுக்கேற்ப தேர்தலில் பெரும்பான்மை கிடைக்குமானால், சோனியா காந்தியே பிரதமராக வரவேண்டும் என விரும்புகிறேன் - என்று கூறினார்.



இந்தியாவின் குடியரசு தினம் நேற்று எழுச்சிபூர்வமாகக் கொண்டாடப்பட்டது. அதனையொட்டி தலைநகர் புதுடில்லியில் செல்லும் கார்களை மறித்து தேசியக் கொடிகளை வழங்கும் சிறுவன்.

உலக அரங்கில்

## பறவைக் காய்ச்சலுக்கு 6வயதுச் சிறுவன் பலி!

'சார்ஸ்' நோயை சாதாரணமாக்கியுள்ள பறவைக் காய்ச்சலுக்கு தாய்லாந்தில் 6 வயதுச் சிறுவன் பலியானான். நேற்று மேலும் இருவருக்கு அங்கு இந்நோய் ஏற்பட்டிருப்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி 11ஆம் திகதி பறவைக் காய்ச்சல் நோய் முதன்முதலில் வியட்நாமில் கண்டறியப்பட்டது. ஆறு வியட்நாமியர்கள் இந்நோய்க்குப் பலியாகிவிட்டனர். பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வியட்நாமில் ஆரம்பித்த இந்நோய், தற்போது ஆசிய நாடுகளில் வேகமாகப் பரவிவருகிறது. தாய்லாந்தில் தீவிரம் கொண்டிருக்கும் இந்நோயைக் கட்டுப்படுத்த அந்நாட்டு அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது.

அதன் முதற்கட்டமாக அங்கு 90 லட்சம் கோழிகள் சாகடிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் கோழிகளை சாகடிக்கும் பணி நடைபெற்றுவருகிறது. கோழிகளிலிருந்து மனிதனுக்குப் பரவும் ஒருவித வைரஸ்தான் அந்நோயை ஏற்படுத்துவதாக டாக்டர்கள் கண்டறிந்ததை அடுத்தே கோழிகளைச் சாகடிக்கும் பணி நடந்து வருகிறது.

தாய்லாந்தின் தென்பகுதி மாகாண கஞ்சாபுனரியில் நேற்று மேற்படி சிறுவன் பலியானான். பறவைக் காய்ச்சல் தாக்கியதன் விளைவே அவனது மரணத்துக்குக் காரணம் என்பதை டாக்டர்கள் உறுதி செய்துள்ளனர். அத்துடன் மேலும் இருவருக்கு இந்நோய் பரவியிருப்பது நேற்று ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கிறது.

இதனால், தாய்லாந்து அரசு இந்நோயைக் கட்டுப்படுத்த பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டு வருகிறது.

இதுவரை இந்நோயின் தாக்கத்திற்கு உள்ளான வியட்நாம், வட கொரியா, இந்தோனேஷியா, கம்போடியா, தாய்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து இந்நோய் எதிர்ப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்க முன்வந்திருக்கிறது.

இந்நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்தும் திட்டத்தை உருவாக்குவதற்காகப் பாதிக்கப்பட்ட நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் மாநாட்டை நடத்த தாய்லாந்து முன்வந்திருக்கிறது.

(ம)

## கடுங்குளிர் தாங்கமுடியாமல் 27 ஹஜ் யாத்திரிகர்கள் பலி!

டுபாய்,ஜன.27

புனித நகரான மொக்காவில் ஒன்றுகூடிய ஹஜ்யாத்திரிகர்களில் 27 பேர் குளிர் தாங்கமுடியாமல் உயிரிழந்தனர். மேலும், 56 பேரின் உடல் நிலை மிகவும் மோசமடைந்திருக்கிறது.

உயிரிழந்த அனைவரும் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 31ஆம் திகதி ஹஜ் பண்டிகையை முன்னிட்டு தற்போதே அங்கு லட்சக்கணக்கானோர் குவிந்துவிட்டனர். இந்தியாவிலிருந்து இதுவரை 32 ஆயிரத்துக்கும் அதிகமானோர் அங்கு சென்றிருக்கின்றனர்.

ஹஜ் பண்டிகையை முன்னிட்டு 20 லட்சம் பேர் புனிதக் கடமையை நிறைவேற்ற மெக்காவில் கூடவுள்ளனர் என்று சவூதி அரேபிய அரசு அறிவித்தது.

இந்நிலையில், அங்கு நிலவும் கடும் குளிரைத் தாங்கமுடியாமல் நூற்றுக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். மதீனாவிலும் கடும் குளிர் நிலவுகிறது. 12 முதல் 17 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையே அங்கு நிலவுகின்றது.

இதனால், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த யாத்திரிகர்களும் தமது யாத்திரையைப் பாதியில் முடிததுள்ளனர்.

(ம)

## பெப். முதல் வாரத்தில் வைகோ வெளியே வருவார்!

சென்னை,ஜன.27

வேலூர் சிறையிலிருந்து பெப்ரவரி 4 அல்லது 5ஆம் திகதியில் வைகோ வெளியே வருவார் என முன்னாள் மத்திய இணையமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன் கூறினார்.

தருமபுரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ம.தி.மு.க. மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் அவர் பேசியபோது; இதனைத் தெரிவித்தார்.

பா.ஜ.க. மதவாதக் கொள்கையுடைய கட்சி ம.தி.மு.கவின் அடிப்படைக் கொள்கைக்கு பங்கம் வந்ததால், பதவி பற்றிக் கவலைப்படாமல் கூட்டணியிலிருந்து வெளியேறினோம். - என்றார் அவர்

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

## 27.01.2004

மந்துவில், மீசாலையைச் சேர்ந்த
**வசந்தகுமார்-சகிலா**
தம்பதிகளின் செல்வப்புதல்வி

# நிருஜா



தனது முதலாவது பிறந்தநாளை இன்று (27.01.2004) செவ்வாய்க்கிழமை பிரான்ஸில வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா, பூட்டிமார், வவா அன்ரி, குட்டி அன்ரி, வித்தி அன்ரி குடும்பம் (ஹொலண்ட்), செல்வா மாமா, ஈசன் மாமா (லண்டன்), சுரேஸ்குமார் மாமா, வசந்தி அத்தை குடும்பம் (சுவிஸ்), மாலினி அத்தை குடும்பம் (இத்தாலி) மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் சோலை அம்மன் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

**வே.கந்தசாமி**
(அம்மப்பா) மீசாலை.

T.P.:213267. (27679)(34)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**2003ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தி யடைந்த எமது பாடசாலை மாணவர்களாகிய-**

| | |
|---|---|
| (1) இ.சோபிஹா - 153 | (2) ப.ஆரூரன் - 152 |
| (3) ம.ரஜிதன் - 139 | (4) அ.ஜயராஜ் - 137 |
| (5) ம.அச்சுதன் - 129 | (6) வி.கங்கா - 128 |
| (7) க.ஜச்சியா - 125 | (8) சி.கஜந்திரன் - 124 |
| (9) செ.தர்சினி - 121 | (10) ஜெ.சஜீபன் - 120 |

**ஆகியோரையும் வெட்டுப்புள்ளியை அண்மித்த ஏனைய மாணவர்களையும் இவர்களுக்கு ஊக்கம் அளித்த அதிபர், ஆசிரியர்களையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் பாராட்டி வாழ்த்துகின்றனர்.**

ஏழாலை மேற்கு
சைவசன்மார்க்க வித்தியாசாலை,
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
(27677)(35-14-18-21)

# இதய அஞ்சலி

தோற்றம் 30 - 01 - 1944



மறைவு 25 - 01 - 2004

## Dr. திருமதி சு.சறோஜினிதேவி

மாதரசி நீ எமக்கு மருத்துவரும்-நீ எமக்கே மறைந்து விட்டாய்
மண்ணுலகில் மனம் ஒடிந்து நிற்கின்றோம். மாதே நீ வாராயோ?

*எனது அருமை நண்பன் சு.ஐங்கரன் அவர்களின் அன்புத் தாயார் Dr.திருமதி சுப்பிரமணியம் சரோஜினிதேவி அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தின் மனச்சாந்திக்காக மருதடியானை வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.*

நவாலி வடக்கு, மானிப்பாய்.

அருமை நண்பன்
தர்மராசா சிவரூபன் குடும்பம்.

(27672)(35-14-18-21)

ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நமஹ

# 12ஆம் ஆண்டு நினைவு கூரல்

தோற்றம் 25 - 02 - 1943



மறைவு 09 - 02 - 1992

அமரர் **மு.இரத்தினவேலு**
(சந்தணம்)
திதி: 27.01.2004

ஆண்டுகள் பன்னிரண்டு சென்றாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாத தெய்வமே!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*உங்கள் பிரிவால் வாடும்:*
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், மருமகள்,
பேர்த்தி, பேரன்.

*சேச் லேன்,*
*கூளாவடி,*
*ஆனைக்கோட்டை.*

(27676) (26-18-14-21)

## சமூக சேவை அமைப்புகளின் விவரங்கள் திரட்டப்படுகின்றன

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ்.மாவட்டத்தில் சமூக சேவைகளில் ஈடுபடும் பதிவுசெய்யப்பட்ட அமைப்புக்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன.

இதற்கான நடவடிக்கையினை யாழ்.மாவட்ட சமூக சேவை அலுவலர் ஆர்.பகீரதன் மேற்கொண்டுள்ளார்.

சி.ஏச்.ஏ.(CHA) எனும் மாவட்ட தகவல் அலுவலகம் இதற்கான பதிவுகளை மேற்கொள்கிறது. (ம-8-185)

## பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு

தெல்லிப்பழை,ஜன.27

தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் அதன் உறுப்பினர்களின் பிள்ளைகள 146 பேருக்கு புதிய கல்வியாண்டிற்கான பாடசாலை உபகரணங்களை வழங்கியுள்ளது.

மேற்படி சங்கத்தின் சமூக மேம்பாட்டு நிதித் திட்டத்தின் கீழ் ரூபா 253/= பெறுமதியான கொப்பிகள், கணித உபகரணங்கள், எழுதுகருவிகள் என்பன அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படவுள்ளன என்று சங்கத்தின் தலைவர் கா.கதிரமலை தெரிவித்தார். (ம-150)

## நாய்களுக்குத் தடுப்பூசி

அல்வாய்ப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி மருந்தேற்றல் எதிர்வரும் 28ஆம் திகதி புதன் கிழமை நடைபெறும் என அல்வாய் பொதுசுகாதாரப் பரிசோதகர் சி.நகுலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அன்றையதினம் காலை 9மணிக்கு வியாபாரிமூலை கலைமணி சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11மணிக்கு அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலையத்திலும் நண்பகல் 12.30 மணிக்கு அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்திலும் வைத்து தடுப்பூசி மருந்தேற்றப்படவுள்ளது. (ம-173)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.27

நெல்லியடிப் பிரதேசத்திலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு இன்று செவ்வாய்க்கிழமை விசர்நோய் தடுப்பு மருந்தேற்றப்படவுள்ளது.

இன்று காலை 9மணிமுதல் 10.30 மணிவரை கரவெட்டி மத்தி தச்சை விநாயகர் ஆலய நெசவு சாலை முன்றிலிலும், 11 மணிமுதல் 12.30 மணிவரை கிளவிதோட்டம் சன சமூக நிலையத்திலும், பிற்பகல் ஒரு மணி முதல் 2 மணிவரை சிந்தாமணி சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 2.15 மணிமுதல் 3 மணிவரை தச்சை ஐங்கரா சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படும். (ம-8)

## அலுவலகத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளன அலுவலகம் குருநகர் ஐந்துமாடிக் கட்டடத்துக்கு அருகில் உள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு சம்மேளனத்தின் தலைவர் எம்.அன்ரனி வின்சன்லோஸ் தலைமையில் திறந்து வைக்கப்படும்.

இவ்வைபவத்தில் பிரதேச கடற்றொழில் சமாசங்களின் பிரதிநிதிகளையும் அவற்றில் அங்கம் வகிக்கும் கிளைச் சங்கங்களின் பிரதிநிதிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-173)

## புலமைப்பரிசில் பெறுபேறுகள் ஒரு பாடசாலைக்கு வரவில்லை

வடமராட்சி கல்வி வலயத்தில் உள்ள வல்வெட்டி விநாயகர் வித்தியாலயத்தின் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் இன்னும் வந்து சேரவில்லை.

குடாநாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் 25ஆம் திகதி புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வந்து சேர்ந்துவிட்டதென்பது குறிப்பிடத்தக்கது. (ம-118)

## அரசியல் நிலையை விளக்கும் தெருக்கூத்து

விடுதலைப் புலிகளின் கொள்கை முன்னெடுப்புப் பிரிவினரின் அனுசரணையுடன் கலைத்தாய் மன்றக்கலைஞர்கள் வழங்கும் 'இரத்தவாடையில் கலந்த தென்றல்' என்ற தெருக்கூத்து குடாநாட்டின் பல பகுதிகளிலும் நடத்தப்பட்டு வருகின்றது.

இன்றைய அரசியல் நிலைப்பாடுகள் குறித்து விளக்குகின்ற இத் தெருக்கூத்தினை பொ.செ.ரகு நெறிப்படுத்தியுள்ளார். (ம-4)

## வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின்

# பெயர் மாற்றம்

வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் துணைவிதி பிரிவு 1 இல் உள்ள வட மாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் என்ற பெயர் **"வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து)"** என சட்டப்படி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

சமாசத்தின் சகல செயற்பாடுகளும் 05.02.2004 ஆம் திகதி தொடக்கம் புதிய பெயருடன் தொழிற்படும்.

இத்திகதிக்கு முன் பழைய பெயரில் உள்ள சகல நடவடிக்கைகளும் வலுவுள்ளதாக அமையும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.


**கி.தவராசா**
தலைவர்.

**லோ.லூயிஸ்**
செயலாளர்.

(C/32943)(34-18-14-21)

# நான்காண்டு நினைவலைகள்

தோற்றம் 15 - 04 - 1933



மறைவு 27 - 01 - 2000

## அமரர் சின்னக்குட்டி குண்டுமணி

திதி: 28.01.2004

ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
ஆருயிர் தந்தைபோல் வந்திடுமா?
ஆண்டுகள் நான்குதான் சென்றாலும்
ஆறிடுமா எம் நெஞ்சங்கள்?

பாரினிலே நாம் சிறக்க
பகலிரவு அயராதுழைத்து
பார்போற்ற வாழவைத்ததை
பாரினில் உள்ளவரை மறவோம்!

"குண்டுமணி நிவாஸ்"
கலைமகள் வீதி,
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

*உம் பிரிவால் துயருறும்:*
**குடும்பத்தினர்.**

(27675) (32-14-16-18-21)

# இதய அஞ்சலி

தோற்றம் 30 - 01 - 1944



மறைவு 25 - 01 - 2004

## திருமதி சுப்பிரமணியம் சறோஜினிதேவி

அமைதி உன் போக்கு ஆதரவு நீ எமக்கு
இன்று நீ போனதேனோ? ஈன்றவள் தனிமை தவிக்கவிட்டு
உனக்கு இது விதி என்றால் ஊட்டி வளர்த்தவள் என் செய்வாள்?
எதை எண்ணி நீ போனாய்? ஏதெமக்கு ஆறுதலிங்கு?
ஐங்கரன், சுபாஷினி இரு முத்துக்கள்
ஓர் ஆறுதலின்றி தவிக்குதம்மா
ஓடியே நீயும் வருவாயோ?

*திரு. சு. ஐங்கரன அவர்களின் தாயார் Dr. திருமதி சுப்பிரமணியம் சரோஜினிதேவி அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் (27690)(35-14-16-18-21) - நண்பர்கள்.

# மரண அறிவித்தல்

## Dr.திருமதி சறோஜினிதேவி சுப்பிரமணியம்

(நவாலி வடக்கு)

ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி (RMO) Dr.திருமதி சறோஜினி தேவி சுப்பிரமணியம் அவர்கள் 25.01.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மானிப்பாய் மகளிர் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியர் த.சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் ஐங்கரன் (கணனி விரிவுரையாளர் IIS), செல்வி சுபாஷினி (ஆசிரிய பயிலுநர் 2ஆம் அணி, யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற அதிபர் சி.கதிரவேலு - இரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற தம்பிஐயா தம்பதிகளின் அன்பு மருமகளும் ஸ்ரீகாந்தன் (கனடா), கௌரிகாந்தன், செல்வி சந்திரகுமாரி (ஆசிரியை, நவாலி மகா வித்தியாலயம்), ஜெயகாந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26.01.2004) திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாற்றங்கரையில் அமைந்துள்ள ஆரியபிட்டி மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
நவாலி வடக்கு, மானிப்பாய். (27671) த.சுப்பிரமணியம் (கணவர்).

(14-32-18-21)

# வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 14 - 06 - 1914



மறைவு 14 - 12 - 2003

## திருமதி மனோன்மணி கந்தையா

14.12.2003 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் மனோன்மணியின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், மலர்வளையம், கண்ணீர் அஞ்சலிகளை காணிக்கையாக்கியோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவிகள் செய்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று (27.01.2004) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(இறுதிக்கிரியையில் கலந்துகொள்ள தவறியவர்களையும் வரவேற்கிறோம்)

*இருபாலை வீதி,*
*(கானான் சேச் முன்பாக)*
*இருபாலை.* (27700)(31-13-17) - குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை
**திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன்** அவர்களின்
அன்புத் தந்தை
**பக்கிரிசாமி குமாரசுந்தரம்** அவர்களின்
மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
(27696)(31-13-17) இசையாசிரியர் கழகம், யாழ். வலயம்.

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் பகுதித் தலைவர்
**திரு.தம்பிஐயா சுப்பிரமணியம்** அவர்களின்
அன்பு மனைவி ஓய்வுபெற்ற டாக்டர்
**திருமதி சறோஜினிதேவி சுப்பிரமணியம்** அவர்களின்
மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.* (27694)(31-17-31) - அதிபர் ஆசிரியர் கழகம்.

# கண்ணீர் அஞ்சலி

எமது சக அலுவலர்
**திரு. வேலுப்பிள்ளை சாம்பசிவம்**
(உதவி திட்டமிடல் பணிப்பாளர், உதவி அரச அதிபர் காரைநகர்)
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி பொன்னம்மா வேலுப்பிள்ளை** அவர்களின்
மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,
அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

*மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.* (சி-32952)(31-17-31) யாழ். மாவட்ட செயலக ஊழியர்களும், நலன்புரிக்கழக உறுப்பினர்களும்.

# துயர் பகிர்கின்றோம்

காரைநகர் உதவி அரச அதிபர்
**திரு. வே.சாம்பசிவம்** அவர்களின்
அன்புத் தாயார்
**திருமதி பொன்னம்மா வேலுப்பிள்ளை** அவர்கள்
காலமானதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு,
அவரது ஆத்மா சாந்திபெற தில்லைக் கூத்தனைப் பிரார்த்திக்கிறோம்.

- செயலாளர்,
உத்தியோகத்தர்கள்,
(27695)(31-13-17) ஊர்காவற்றுறை பிரதேச சபை.

# கண்ணீர் அஞ்சலி

நவாலி அட்டகிரி முருகன் தேவஸ்தான
முன்னாள் உப தலைவரும்
தற்போது வழிபடுவோர் சங்கச் செயலாளருமான
**திரு. சு.ஐங்கரன்** அவர்களின் தாயாரும்,
ஓய்வுபெற்ற ஆசிரியர்
**திரு. த.சுப்பிரமணியம்**
(மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்னாள் ஆசிரியர்)
அவர்களின் அன்பு மனைவியுமான
**Dr. சறோஜினிதேவி சுப்பிரமணியம் (R.M.O.)**
அவர்கள் 25.01.2004 இல் சிவபதமெய்தியதையிட்டு
நவாலி அட்டகிரி தேவஸ்தான வழிபடுவோர்
சங்க உறுப்பினர் சார்பாக
அனுதாப அஞ்சலிகளைச் செலுத்துவதுடன்,
அன்னாரது ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நவாலி அட்டகிரி கந்தசுவாமி தேவஸ்தானம், நவாலி.* (27699)(31-13-11) வழிபடுவோர் சங்க உறுப்பினர்கள்.

## உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கு!

உடற்கல்வி ஆசிரியர் ஆள்சேர்ப்புக்கான விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல் கலந்துரையாடல், இன்று செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணிக்கு யாழ். நீராவியடி பிறைற்மன் கல்வி நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது. இதில் உடற்கல்வி டிப்ளோமாதாரிகளைக் கலந்துகொள்ளுமாறு உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கம் கேட்டுள்ளது. (ஒ)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டங்கள்

ஊர்காவற்றுறை.ஜன.27

ஊர்காவற்றுறைப் பிரதேசச் செயலக மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-16)

★ ★ ★

பச்சிலைப்பள்ளி பிரதேச ஒருங்கிணைப்புக்கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ்.புத்திசிகாமணி தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சமுகமளிக்கவுள்ளார்.

ஆகவே, சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் பிரதிநிதிகளையும், அமைப்புகளின் பிரதிநிதிகளையும் தவறாது சமுகமளிக்குமாறு பிரதேசசெயலர் கேட்டுள்ளார். (ஒ)

## மண்ணெண்ணெயை அடுப்புக்குள் ஊற்றியவர் எரிகாயமடைந்தார்!

தென்மராட்சி.ஜன.27

அடுப்பை எரியவைக்க அடுப்புக்குள் மண்ணெண்ணெய் ஊற்றிய போது எழுந்த தீச்சுவாலையால் வயோதிபர் ஒருவர் எரிகாயங்களுக்கு இலக்கானார் இந்தச்சம்பவம் கடந்த சனிக்கிழமை மட்டுவில் வடக்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச்சேர்ந்த சுந்தரம் நடராசா (வயது60) என்பவரே முகம், கை, மார்பு, வயிறு ஆகிய பகுதிகளில் எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-117)


**வீட்டுப்பணிப்பெண் தேவை**

வயோதிப மாது ஒருவருக்குத் துணையாக இருந்து பணிகள் செய்யப் பணிப்பெண் தேவை.
தொடர்பு: தாரணி பதிப்பகம்,
319, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (சி-32954)

**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள
LETTER PRESS MACHINE
OFFSET MACHINE
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: தாரணி பதிப்பகம்,
319, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி-32955)

**ராஜா யாழ்ப்பாணம்**
பிரசாந்த் நடித்த
ஜூட்
(ரீகல்ஸ்)
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
(சி-32469) (32)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

ஷாம், அருண்குமார், குட்டி ராதிகா, செந்தில் நடித்த
இயற்கை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பி.நே.)
Can You Do A Lote Come விரைவில் HULK
(C-32370) (32)

**நாகம்ஸ்** சுன்னாகம்
கமல், அபிராமி, நெப்போலியன், நாசர் நடித்த
E.A.P.இன் பொங்கல் வெளியீடு
விருமாண்டி
(சண்டியர்) (ரீலஸ்)

காட்சி நேரம்:
11.00, 3.00, 7.00 (பி.நே.)
(சி-32739)(31)

**லிபேட்டி** அச்சுவேலி
ராஜ்கிரன், மீரா கிருஷ்ணா, விஜயகுமார் நடித்த
கோவில் சேவகன் (ரீலஸ்)
தினசரி : 3.00, 7.00.
புதன் முதல்
(சி-32563)


# இல்லற வாழ்வில் ஓராண்டு

நல்லறமாம் இல்லற வாழ்வில் இணைந்து
வருடமொன்றைக் காணும் எமது அன்புகளான
**திரு. திருமதி கணேசன் - ஜெகமணி**



ஆகிய இவர்களை மேன்மேலும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

*முகவரி:*
*கைதடி தெற்கு, கைதடி.*

வாழ்த்துபவர்கள்:
தந்தை, சகோதரன், சகோதரிகள்.
(சி-32956)(31-13-17)

# அப்பலோ வைத்தியசாலை நிபுணர்களின் மாபெரும் இலவச மருத்துவ சிகிச்சை முகாம்

எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை இலவச மருத்துவ சிகிச்சை முகாம் ஒன்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. கொழும்பு லயன்ஸ் கழக அனுசரணையுடன் யாழ். லயன்ஸ் கழகமும், அப்பலோ வைத்தியசாலை வைத்திய நிபுணர்களும் இணைந்து மாபெரும் சிகிச்சை முகாம் ஒன்றை நடத்தவுள்ளனர். இந்த சிகிச்சை முகாமில் அனைத்து நோய்களின் வைத்திய பிரிவுகளும் சிறப்பாக இருதயநோய்ப் பிரிவும் அடங்கும். அத்துடன், கண்பரிசோதனையும் நடத்தப்பட்டு இலவச கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளன.

இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாது அனைத்து நோயாளர்களும் நேர காலத்துடன் சமுகம் கொடுத்து பலன் அடைய அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

(27689)(31-13-17) - ஆயர் இல்லம்.

# 11ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 13 - 12 - 1921



மறைவு 17 - 01 - 2004

## அமரர் பக்கிரிசாமி குமாரசுந்தரம்

சித்தம் மகிழ்ந்திடவே மாவை
முருகனை நினைந்து
நித்தமும் வணங்கவே
திருவடியடைந்தீர்கள்
என்றும் உங்கள் ஆத்மா
முருகன் அடியில் தவழ
இன்றும் வணங்குகிறோம்
உங்கள் குடும்பத்தோர்.

இன்று (27.01.2004) செவ்வாய்க்கிழமை நல்லூர் திவ்ய ஜீவனசங்க மண்டபத்தில் அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதியபோசனமும் நடைபெற உள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் தவறாது கலந்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*128, ஆடியபாதம் வீதி,*
*நல்லூர்.* (சி-32951)(31-11-13) - குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னம்மா வேலுப்பிள்ளை

காரைநகர், களபூமி, பொன்னாவளையைப் பிறப்பிடமாகவும் 9/2 கோபால் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை பொன்னம்மா அவர்கள் 25.01.2004 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னையா - கதிராசிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை - கற்பகம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை, ஆறுமுகம், கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் சுந்தரம்மா, காலஞ்சென்ற ஆறுமுகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் கயிலைநாதன் (ஜேர்மனி), சாம்பசிவம் (உதவி அரச அதிபர், காரைநகர் / உதவி திட்டமிடல் பணிப்பாளர் மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்) நகுலேஸ்வரன், அருந்ததிதேவி, சச்சிதானந்தம், கேதீஸ்வரநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் விமலாதேவி (ஜேர்மனி), விஜயலஷ்மி, தவராணி, மார்க்கண்டு, இராகினிதேவி, சந்திராதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2004) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் வண்ணார்பண்ணையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*9/2, கோபால் லேன்,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்*
*T.P: 021 222 5566*
(17-13-11-31)

தகவல்:
வே. சாம்பசிவம் (மகன்)
உதவி அரச அதிபர் காரைநகர் /
உதவித் திட்டமிடல் பணிப்பாளர்
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
(27697)

# எதிரும் புதிருமான கொள்கைகள் கொண்ட கூட்டு: இனப்பிரச்சினைத் தீர்வு காணப்போவது எவ்வாறு?

## கேள்வி எழுப்புகிறார் அமைச்சர் பீரிஸ்

கொழும்பு,ஜன.27

ஜே.வி.பியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சமாதான முயற்சிகளுக்கு நேரடியாகப் பாதிப்பை ஏற்படுத்தும் நான்கு அம்சங்கள் காணப்படுகின்றன. முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களையும்,கொள்கைகளையும் உடைய இந்தக்கூட்டணி இனப்பிரசசினைக்குத் தீர்வுகாண எப்படி இணைந்து செயற்படப்போகிறது?

இப்படிக் கேள்வி எழுப்பினார் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ். நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் ஜே.வி.பி.-ஸ்ரீல.சு.க. கூட்டுத்தொடர்பாகக் கேட்கப்பட்டபோதே இவற்றை அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

★ அரசும் - புலிகளும் செய்துகொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை தகுதிவாய்ந்தவர்களால் செய்துகொள்ளப்பட்டதல்ல, முறைதவறிச் செய்யப்பட்ட இந்த ஒப்பந்தத்தை ஏற்கமுடியாது என்று புதிய கூட்டணி கூறுகிறது. இது தீர்வு முயற்சிக்கான முதலாவது தடைக்கல்.

★ இரண்டாவதாக, சமஷ்டிமுறையில் அதிகாரப்பகிர்வை ஏற்படுத்துவது என ஒஸ்லோமாநாட்டில் இணக்கம் காணப். பட்டது.

ஆனால், ஸ்ரீல.சு.கட்சியினர் மாகாண மட்டத்தில் அதிகாரங்களை அதிகரிகலாம் என்கின்றனர். ஜே.வி.பியினரோ உள்ளூராட்சி சபைகளுக்கே அதிகாரத்தை வழங்கலாம் என்று கூறுகின்றனர். இது அதிகாரப்பரவலாக்கத்தில் காணப்படும் முரண்பாடு.

★ இடைகால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக விடுதலைப புலிகள் முன்வைத்துள்ள வரைவுகளின் அடிபபடையில் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என ஜனாதிபதி முன்பு கூறினார். ஸ்ரீல.சு.கட்சியுடனான கூட்டின் பின் புலிகளின் ஆலோசனைகள் தனி நாட்டுக்கான அத்திபாரம் என்று நிராகரிக்கின்றனர் ஜே.வி.பி.யினர் இது மூன்றாவது தடை.

★ சமாதானப் பேச்சுக்கு ஆரம்பம் முதலே நோர்வே அரசு அளப்பரிய பணியாற்றிவந்துள்ளது. நோர்வேயை அழைத்தவரே ஜனாதிபதிதான். புதிய கூட்டணி சேர்ந்தபின், நோர்வே அனுசரணை மீள்பரிசீலனை செய்யப்படவேண்டும் என்கின்றனர்.

இப்படி முரண்பட்ட நோக்கங்களை உடைய இரு தரப்பினரால் எப்படி ஒத்தகருத்துடன் தீர்வுகாணமுடியும்? -இப்படி கேள்வி எழுப்பினார் அமைச்சா பீரிஸ்.

மேலும் அரசு - புலிகள் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு - யுத்த நிறுத்த உடன்படிக்கையின் முதலாம், இரண்டாம் சரத்துக்களுக்கு அமைய, பேச்சுக்களின்போது காணப்படும் இணககப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு பிரதமரின் கட்டுப்பாட்டில் பாதுகாப்புப் படைகள் இருக்கவேண்டும் என்பது கட்டாயமாகிறது. இந்த அதிகாரம் வழங்கப்படாதவிடத்தில், சமாதானப் பேச்சை ஆரம்பிக்கமுடியாது என பிரதமர் திட்டவட்டமாக அறிவித்துவிட்டார். இவ்விடயத்தில் ஜனாதிபதியும் மீள்பரிசீலனை செய்வார் என்ற நம்பிக்கை உண்டு என்றும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.

---

## சு.க. - ஜே.வி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எது. இது விடுதலைப் புலிகள் தலைமைத்துவமிடையே சந்தேகங்களைத தோற்றுவிக்கும்.

ஜே.வி.பி. என்ன தாக்கத்தை ஏறபடுத்தும் என்பதும் நிச்சயமற்றதாகும். கூட்டமைப்புக்கு முன்னர் ஜே.வி.பி. விடுத்த அறிக்கைகள் மிகவும் மிதவாதத் தரப்பையே வெளிப்படுத்தின. இலங்கையின் சிறுபான்மையினர் பற்றிய தமது நிலைப்பாட்டை அவர்கள் மிதவாதப் போக்கானதாக்கிக் கொணடவர்களா என்பது விடையளிக்கப்படாத கேள்வியாகும்.

பேராசிரியர் புளும் கூறியதாவது:- சு.கட்சி மேலும் வலது சாரியாக நகர்ந்து செல்வதை கூட்டமைப்பு சட்டபூர்வமானதாக்குவதால் சமாதான முயற்சியை அது மிகவும் பாதிக்கும். தமிழ் மக்களைப் பொறுத்த தனது நிலைப்பாட்டை ஜே.வி.பி. மிதவாதப்படுத்துவது நடக்காததொன்றாகும். (ஐ)

---

## பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் நோர்வே அனுசரணையாளர் ஊடாக இந்தியாவுக்கு அவர் தெரியப்படுத்தியிருக்கின்றார்.

புலிகளின் இராணு வலிமையைச் சமாளிப்பதற்கு இத்தகைய இராணுவ ஒப்பந்தம் பயனுள்ள ஒரு பொறி என்று பிரசாரப்படுத்துவதன் மூலம் அரசியல் லாபம் தேடும் விரக்தியின் முனைப்பில் இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவருமே உள்ளனர் என்றும் பாலசிங்கம் கூறினார்.

இந்த உத்தேச ஒப்பந்தம் குறித்து புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனும் ஏற்கனவே கவலை வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

"உத்தேச ஒப்பந்தம் தமிழரை அச்சுறுத்த முன்வைக்கப்படும் ஒரு பூச்சாண்டி. அது இந்த நாட்டின் இனப்பூசலில் வெளிநாட்டு சக்திகளை ஈடுபடுத்தும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பின்னும் சர்வதேச வலைப்பின்னலின் ஓர் அங்கம்" - என்று கடந்த 14ஆம் திகதி 'உதயன்' பத்திரிகைக்கு அளித்த விசேட செவ்வியில் தமிழ்செல்வன் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

"இந்த இனப்பூசலுக்குள் பிற நாடுகளை இழுப்பது நீண்டு செல்லும் இந்தப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும்" - என்று அவர் தெரிவித்தார்.

---

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றன. பேச்சுகள் இடைநிறுத்தப்பட்டபின் நாம் நேரடியாகப் புலிகளுடன் பேசும் சந்தர்ப்பம் கிட்டவில்லை. ஆனால், நோர்வே அனுசரணையாளர்களின் ஊடாகக் கருத்துப் பரிமாற்றங்கள் தொடர்கின்றன.

ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி விடுதலைப் புலிகளுடன் நேரடியாகச் சென்று நிலைமைகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்துள்ளார். அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடரவேண்டும் என வலியுறுத்தியுள்ளார். எக்காரணம் கொண்டும் இலங்கைக்கான உதவிகள் நிறுத்தப்படமாட்டாது. தென்பகுதியில் அரசு அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்தும் அதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடி அவர்களின் சிபார்சுக்கமைய அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வாஷிங்ரன் மாநாட்டில் ஜப்பான், நோர்வே, அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்வர்.

ஜனாதிபதியும், பிரதமரும் முறுகல்நிலைக்குத் தீர்வுகாண்பதில் ஆர்வமுடன் செயல்படுகின்றனர். கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியின் பிரதம ஆலோசகரான மனோதித்தவெல, ஐ.தே.க. தவிசாளர் மலிக் சமரவிக்கிரம, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோர் சிக்கலான விடயங்கள் தொடர்பாக பரிசீலனை செய்துள்ளனர்.

- இவ்வாறு அவர் கூறினார்.

---

## கடற்படைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டது என்றும் -

இதனைத்தொடர்ந்து சக கடற்படையினர் காவலரணுக் குக்குள் சென்று பார்த்தபோது, துப்பாக்கியை அணைத்தபடி, விஜயவர்த்தனா இறந்து கிடந்தார் என்றும் -

வடபகுதி கடற்படைத் தலைமை அதிகாரி கோகலலியனகே உபுல் நிசங்க தெரிவித்தார்.

கடந்த 3 மாதங்களுக்கு முன்னரே விஜயவர்த்தனா காரைநகர் கடற்படைத்தளத்தில் பணியில் இணைந்துகொண்டார் என்றும் - இவருக்கு அண்மையிலேயே திருமணம் நடந்தது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சடலத்தை பிரேதபரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-9)

---

## வெள்ளவத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயப்படுத்தப்பட்டார்.

தாக்குதல் மேற்கொண்டவர்கள் தப்பிச்சென்று விட்டார்கள். படுகாயமடைந்தவர்கள் உடனடியாகக் களுபோவில ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

- இப்படித் தெரிவிக்கபட்டது.

காயமடைந்தவர்களில் ஒருவர் ஆபத்தான கட்டத்தைத் தாண்டி விட்டார் என்றும் -

மற்றைய பொலீஸாரின் நிலை கவலைக்கிடமாகவே உள்ளது என்றும் -

வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் தொடர்பாக எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. பொலீஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச்சம்பவத்தால் தமிழர்கள் செறிந்து வாழும் வெள்ளவத்தைப் பகுதியில் நேற்றுப் பதற்றம் நிலவியது.


நியூ சயன்ஸ் அக்கடமி
நெல்லியடி
A/L - 2005, 2006
கணித, உயிரியல்
புதிய பிரிவு ஆரம்பம். (27551)

NCA கல்வி நிறுவனம்
சாரையடி, பருத்தித்துறை.
A/L 2006
கலை, வர்த்தகம்
புதிய பிரிவு ஆரம்பம் (27552)(30)

பொருளியல்
திரு. K. உதயன்
A/L 2006
2ஆவது புதிய பிரிவு
பிரிவு I சனி, ஞாயிறு 9.30 - 10.30
(100 பேருடன் அனுமதி நிறுத்தப்படும்)
பிரிவு II சனி, ஞாயிறு 8.30 - 9.30 (S.L.T.)
ஆரம்பம்: 01.02.2004
விக்னா
கல்வி நிறுவனம் (32959)(11-12)

Lingam master - swiss
சுவிஸ் வாழ் தமிழர்களின்
முன்னணி ஆசிரியர்
Deutsch - பெரியவர்களுக்கு
Deutsch - பாடசாலை மாணவர்களுக்கு
தொடர்பு:
062 7974164 - 079 3344733,
4665 Oftringen - swiss. (26642)(36-12-11)






கண்ணீர் அஞ்சலி

காரைநகர் உதவி அரசாங்க அதிபர்
வே.சாம்பசிவம் அவர்களின்
அன்புத் தாயார்
திருமதி வேலுப்பிள்ளை பொன்னம்மா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தபாற்கந்தோர், காரைநகர். (32957) (12-11-17) தபால் அதிபரும் ஊழியர்களும்.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

மலர்வு 11 - 02 - 1923
உதிர்வு 28 - 12 - 2003





அமரர் விசுவர் மயில்வாகனம் (கப்பல்)

அன்பு அப்பாவே! எங்களை வாழ
வைத்த தெய்வமே! நீங்கள் மறைந்து
முப்பத்தொரு நாள்கள் ஆனாலும்
என்றும் எங்கள் நெஞ்சங்களில் நீங்கள்
அணையாத தீபம் அப்பா!

இன்று (27.01.2004) செவ்வாய்க்கிழமை 12.00 மணியளவில் எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திவேண்டி ஏழாலை தெற்கு, களபாவோடை அருள்மிகு வசந்த நாகபூசனி அம்பாள் தேவஸ்தானத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மாகேஸ்வர பூசையும் இதேபோல் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழையிலும், பிரான்ஸ், அவிட் ஒப் பரிஸ (OUT OF PARISE) மகன் இல்லத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறும்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

M.Sundaralingam,
16, Rue Def Bofquests,
Appl Etgo,
78130 Lesmureaux,
France.Te.00331 - 34 920945.

தகவல்:
மகன் - ம.சுந்தரலிங்கம் (பிரான்ஸ்),
மருமகள்,
பேரப்பிள்ளைகள். (27698) (12-11-17)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.01.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.